[illegible]

V. 1. No. 50   13 Dec 1928.

N28.1.50
189033

Reg. No.
M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வரு டிசம்பர் மீ 13உ [No. 50.

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	981	5.	பொய்யாற் பொலிவது புலமை. K. இராஜகோபாலன்	991
2.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	983	6.	வானசாஸ்திரம்	993
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	986	7.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	995
4.	தமிழ்ப் பாடம்.	989	8.	வர்த்தமானம்.	999

கலா நிலயம்.

இருப்பது என்ன ஆயிற்று.

என்னவென்று கருதி இவ்வாரம்பக் கல்வியின் அவசியத்தை யாவரும் எங்கும் அளவிறந்து பாராட்டுகின்றனரோ தெரியவில்லை. முதியோரும் இளையோரும் பாலரும் யாவரும் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்கள் அந்நாட்டில் இல்லையென்றபடி நான்குமாத காலத்திற்குள் முடித்துவிடுவதற்குத் துருக்கிதேசத்தில் பெரியதோர் முயற்சிசெய்து வருகின்றார்கள் என்று பத்திரிகை வாயிலாகஅறியலாகின்றோம். இதற்காகத் துருக்கிப் பார்லிமெண்டார் ஒரு லக்ஷம் பவுன் செலவுக்கு அளித்திருக்கின்றார்களாம். கிராமங்கள்தோறும் பட்டினங்கள்தோறும் நான்குமாத காலங்களில் பாடமோதும் வகுப்புக்கள் அமைத்து, அவைகளில் ஜனாப் கமால் பாக்ஷா முதலாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரும் பாடம்சொல்லிக் கொடுக்கப்போகின்றார்களாம். தூரமான விடங்களுக்குப் போய்ப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது ஆகாயவிமானங்கள் வழியாக அன்றன்று சென்று வருவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்துகொண் டிருக்கின்றார்களாம். இதனைக் காட்டிக்காட்டி நம் நாட்டோர் பலர் இன்னவாறு இங்குச் செய்வதற்கு அரசாங்கத்தார் முன்வந்திலரே யென்று இரங்குகின்றனர். இரண்டு மூன்று வருடங்களுக்குமுன் இத்தென்னாட்டு முதன்மையோரிற் சிலர் ஒன்றுகூடி இத்தகைய அரியமுயற்சியொன்று செய்து மூன்று மாதத்திற்குள் தமிழ் நாடெங்கும் சிறு கிராமமும் விடாமல் எந்நிலைமை எத்தொழில், எவ்வயதினோர்க்கும் அக்ஷராப்பியாசம் செய்து முடித்து விடுவதென அரிதின் முயன்றது பலர்தம் நினைவினில் இருக்கலாம். இம்முயற்சி இங்கு ஒருசிறிதும் நடைபெறவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. ஆயினும், துருக்கியில் நினைத்தபடி யாவும் நிறைவேறினாலும் அவ்வாறு அது நிறைவேறுவதற்கும், இங்கு நிறைவேறாது போயதற்கும் பயனளவில் யாதும் வித்தியாசம் இல்லையென்றே மதிக்கின்றோம்.

ஆரம்பக் கல்வியென்றும், கட்டாயக் கல்வியென்றும், கல்விக்குப் பொருந்தாத பெயர்களையிட்டு இந்தப் பெயர்களில் இருக்கின்றது நம் பாக்கியமெல்லாம் என விவகரிப்பதால் நாட்டினது நலத்திற்குச் சிறிதும் உதவியாம் என்பதற்கு நியாயமில்லை. இதனை இப்பத்திரிகையின் பலவிடங்களில் பற்பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். தத்துவ உணர்ச்சி உடையவரும் சென்னையின் கலெக்டரா யிருந்தவருமாகிய ஸ்ரீமான் S. V. இராமமூர்த்தி அவர்கள் I. C. S. சில மாதங்களுக்குமுன் தஞ்சையில் செய்தவோர் உபந்நியாசத்தைப் 'பொது ஜனக்கல்வி' யென்னும் தலைப்பின்கீழ் நம் பத்திரிகையில் (முன் 76-வது பக்கத்தில்) முடிய மொழிபெயர்த்து வரைந்துள்ளோம். அவரும், அவர்போன்று சொல்லால் முழக்குதலின்றிச் செய்கருமத் திறத்தின் உட்கருவை நோக்குதற் கியன்றவர்களும் இக்கல்வி

யைப்பற்றி இயம்புவது உண்மையாயின் வேறு, இவ்வகையில் எழுதவும் படிக்கவும் கணக்கெண்ணவும் கற்றுத்தருவதைக் கைப்பிடித்து 'இதுவன்றோ உமக்கு நிகரிலா நலங்கள் அளிக்கப் போகின்றன' என்று விளம்புவாரெல்லாம்,உண்மை அறியாதாரேனும், பிறர் கூறியதைத் தாங்கூறி அவரயலே விளங்குகின்ற வோர் கொள்கையர்களாகவேனும், மற்று உண்மைதான் தெரிந்திருந்தும், பொது ஜனங்களால் பேருபகாரியென்று பாராட்டப்படுவதற்கு, இவ்வாறு முயலுகின்றேனென்று இயம்பிவருதல் எளியதோர் வழியென்று கருதியவர்களாகவேனும் இருத்தல்வேண்டும். இல்லையெனில் ''கண்ணன் தின்னும் பண்டம் என்ன'' என்பதைப் படிக்கத் தெரிவதாலும், "ஒருகோழி நாலரையணு வீதம் பதினேழு கோழியின் விலையைச் சொல்வதாலும், யாருக்கு என்னபயன் என்று உள்ளுற எண்ணி யிவர் விவகரிக்கின்றனர். இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்க ளில்லாமலே அவனவனுக்கு வேண்டிய கோழிக்கணக்கு எப்படியும் அவனுக்குத் தானகவே தெரியவரும். கண்ணன் தின்னும் பண்டத்தை என்னவென்று எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்பதால் ஒருவனுக்கு உண்டாகத்தக்க பேரறிவு அதனைப்படிக்காமலே வருவது அருமையன்று. உண்மை இதுவாயிருக்க, ஆரம்பக்கல்வியே நாட்டினது நலங்களுக்கெல்லாம் அடிப்படையான ஆதாரமாகும் என்று ஓயாது உரைத்து வருகின்றவர்கள், என்ன என்ன காரணங்கள் காட்டுகின்றார்கள்? அவைகளைச் சுருக்கமாய்க் கருதி அவைகளின் அமைதியை ஆராய்வோம்.

"ஆகா! நாலெழுத்து எழுதப்படிக்கத் கூடத் தெரியாமலிருந்தால் என்ன பிரயோஜனம்!" என்று அழுத்திச் சொல்வதாலேயே அப்பிரயோஜனங்களை யெல்லாம் கூறிவிட்டதாகாது. "அந்தப் பிரயோஜனங்கள்தான் எவைஎவை, விரல்விடும்" என்று மறித்துக் கேட்போமாயின், ஆரம்பக்கல்வியின் அவசியத்தைப் புதாகாரமாகப் புகல்கின்றவர் விடுகின்ற விரலோ சுண்டெலியின் விரலினும் சிறியதாயிருக்கும். "படிக்கத் தெரியாதவர்களை இரயிலடியில் எத்தனைபேர் 'டிக்கட்' வாங்கித்தருவதில் மோசம்செய்து விடுகின்றனர். படிக்கத் தெரிந்தால் மோசம் போவார்களா?" என்பன போன்ற அற்பப் பிரயோஜனங்களே அவர்களால் காட்ட இயலும். பெரும்பாலும் மோசம் செய்கின்றவன் எழுதப்படிக்கத் தெரிந்த மேதாவியாகவே யிருப்பான் என்பதை அவர் மறக்காதிருப்பின் நலமாம். படிக்கத்தெரிந்து மோசஞ் செய்கின்றவனைக் காட்டிலும் படிக்கத் தெரியாமல் மோசம் போகின்றவனே உத்தமன். உண்மையான ஜனநலத்தைத் தேடிவைக்க வருகின்றவர்கள் தத்துவ அறிவு உடையவர்களானால், ஆரம்பக்கல்வி கிடக்க, உயர்தாக் கல்வியெல்லாம் பெற்றவர்கள் ஏன் மோசஞ் செய்கின்றார்களென்பதை ஆராய்ந்து அன்னவர்க்கு மோசக்கருத்துத் தோன்றுவகை செய்துவைக்க நாடுவார்களே யல்லாது, மோசம் போகாதபடி தம்மைக் காத்துக்கொள்ளக் கற்பிக்க வேண்டுமென்று சொல்லத் துணியார். இனி, படித்தவர் படிக்காதவர் இருதிறத்திலும் மோசம் செய்கின்றவர்களும் இருக்கின்றனர்; மோசம் போகின்றவர்களும் இருக்கின்றனர்.

"வந்த கடிதத்தை வாசிக்க வேண்டாவா?" என்பர். வந்த கடிதத்தை வாசிக்கத் தெரிவதா வாழ்க்கை! படித்துச் சொல்வதற்கு ஊரிலேயாரும் அகப்படாமலா போய்விடுவார். "இரகசியமாயிருந்தாலோ?"என்னின்,பிறரறியப்படாத ஒன்றை எழுதி அனுப்பாமலும் படித்துக் கொள்ளாமலும் இருப்பதே நல்லது. தகவுடைய செயலெதுவும் சொல்லெதுவும் இரகசியமாகா!பொய் வாழ்க்கைக் கன்றோ பக்கத்துணை இரகசியம்!

உயர்தரக் கல்லூரியொன்றில் தலைமையாசிரியரா யிருப்பவர் ஒருவர் ஆரம்பக்கல்வியைப்பற்றிச் செய்தவொரு உபந்யாசத்தில், தேர்தல் சீட்டில் (Ballot Paper) பேர்படித்துக் குறிபோடுவதற்கு அது அவசியம் என்று பலபட எடுத்துக் காட்டினர். தேர்தல் சீட்டில் தவறுமல் குறி போடுவதற்காகவே நாம் ஜன்மம் எடுத்திருப்பதாகக் கருதினவர்போல் அவர் கட்டுரை விளங்கியது. கல்விமான்களாய அபேக்ஷகர்கள் எல்லாரும் சமமாகத் தகுதியுடையவர்களா யிருப்பாராயின் யார்பேரிற் கெதிரே குறி விழுந்தாலும் பாதகமில்லையே. தகுதியற்றவர் ஏன் அபேக்ஷகர்களாய் நிற்கின்றனர் என்பதை விசாரித்துச் செய்யவேண்டுவன செய்வதை விடுத்துக் குறிபோடும் கையைத் திருத்திவைக்க முயல்வதை என்னென்றுரைப்பது!

இன்னபல உதாரணங்கள் எத்தனையோ காட்டலாம். உரைபெருகுமென வஞ்சி விடுகின்றோம். ஆரம்பக்கல்வியின் பிரயோஜனங்கள் என்ற இவ்வினம் பொருளற்றவை எனத் தேர்தற்கு இவை போதும். ஆனல் மேற்பார்வைக்குப் பொருளிருப்பதுபோல் தோன்றும் 'பிரயோஜனம்' ஒன்றுளது. "எழுதப்படிக்கவேனும் யாவர்க்கும் ஓதிவைத்திருந்தாலன்றோ ஜனங்களுக்குக் கல்வியில் ஒரு ஆசை உண்டாகித் தாங்களே மேன்மேலும் கற்றுக் கல்வியால் வரும் நன்மைகளை எய்தினவர்களாவார்கள்.'' என்று எடுத்துக் காட்டும்போது "உண்மையே, இது உண்மையே" எனச் சிலர் விரைவில் எண்ணிக்கொள்வது இயற்கையே. ஆனல், இதுவும் பொருளுரை யன்றென உணர்வதற்கு, எழுதப்படிக்கக் கற்றிருக்கின்றவர்களைப் பார்ப்பதே போதும். ஆரம்பக்கல்வியோடு நில்லாமல் நடுத்தர உயர்தர வகுப்புக்களில் படித்திருப்பவர்களும், சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற்றிருப்பவர்கள்தான் ஆகட்டும், எத்தனைபேர் மேன்மேலும் கற்கவேண்டும் என்ற ஆசையோடு சிறந்த இலக்கியங்களின் பழக்கத்தை விடாது தொடர்ந்து வருகின்றனர் என்று கேட்போருக்கு ஏதுவிடை? வர்த்தமானப் பத்திரிகைகளும் தகவற்ற நாவல்களும் சிற்சிலர் கையிலே புகுந்திருப்பதைக்கண்டு இன்னோர் கல்வியும் தாமுமாய்க் கலந்த வாழ்க்கையர் ஆய்விட்டனர் என்று கூறலாமோ! பி. எ. பட்டமும் பெற்றிருப்பவர்களது வீடுவீடாய்ச்

சென்று பார்த்தால் 'ஷேக்ஸ்பியர்' நூல்தானும் இந்நாள் இருக்கவும் காணமாட்டோம். கம்பராமாயணமும், சிலப்பதிகாரமும், படிக்காமற்போனலும், இருப்பதாவது எத்தனைபேர் வீட்டில்? ஒரு வரிகூடப் படிக்கக் கற்காதிருந்த நமது பாட்டனுக்குப் பாரதக்கதை முழுவதும் தெரிந்தது. படிக்கக் கற்ற பேரனுக்குப் பாண்டவர்கள் பேரேனும் தெரிந்திருந்தால் பிரம்மவித்தை.

ஆதலால் எழுதப்படிக்கக் கற்பித்துவிட்டால் யாவரும் இலக்கிய சிகாமணிகளாகி விடுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்குமுன், உயர்தரக்கல்வியும் கற்றிருப்பவர் ஏன் ஆகவில்லை என்பதைச் சிந்திப்பதன்றோ முறை. நம் தென்னுடுகளில் அதனினும் சிறப்பாக யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் மாலைதோறும் கோயில் முதலிய இடங்களில் கந்தபுராணம் முதலிய புராணங்களைப் பண்டிதர்கள் படித்து அர்த்தம்சொல்வதும் அதனை ஊரார் சென்று கேட்டுவருவதும் வழுவாது நமக்கு முன்தலைமுறை வரையில் நடந்து வந்ததை யாவரும் அறிவர். இன்னவர், பெரும்பெரும் படிப்பெல்லாம் படித்து ஆரம்பக் கல்வியின் அவசியத்தைக் கொண்டாடுகின்ற நம்மனோர் பலரைக் காட்டிலும் கல்வியாலும் அறிவாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்தவரா யிருந்தனர் என்பதற்கையமில்லை கந்தபுராணம் என்றபேரைப் படிக்கத் தெரியாதிருந்தவரும் சிவனுடைய அநுக்கிரகத்திற்குப் பாத்திரராதல் கூடும்.

இவைகளையெல்லாம் நாமிங்கு எடுத்துக் காட்டுமாற்றால் ஆரம்பக்கல்வி ஒருவருக்கும் கற்பிக்கப்படாதென்று நாம் வாதிப்பதாக எண்ணிக் கொள்ள வேண்டா. எழுத்தின் அருமை தெரிந்ததாற்றான் இது கூறுகின்றோம் பாடசாலைகளில் படித்துக் கொண்டு வருகின்றவர்களே கல்வியைக் கல்விக்காகக் கற்று அதனல் வருதவற்குரிய பயன்களையெல்லாம் பெற்று மனோவாக்குக் காயங்களின் மேன்மையை எய்தி விளங்குவதற்கொத்த வகைகளொன்றும் காணுதிருக்கும்போது, சொல்வதற்குச் சுலபமாயிருக்கின்றதென்று ஆரம்பக்கல்வியை அத்துணைப் பாராட்டுவதன் பொருத்தத்தைக் காணுமை,காணுதார் குறையன்றெனத் துணிந்து கூறலாம்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

9. அகலிகைப்படலம்.

(967-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாநயங் கருதியே நவின்றனன் சிலமொழி.

"ஸுரச்ரேஷ்டம், க்ருதார்த்தே நாந்த ராத்மனு" என்று அகலிகை வடமொழியில் நயந்துரைத்த சொற்களை நினைவிற்கொண்டே கோசிகன்,இங்குத் தையலாள் நயன வேல் புக்கவழி இந்திரன் மார்பினூடு மன்மதன் சரமும் பாய்வதற்கு எளியதாயிற்று என இயம்பியிருத்தல் வேண்டும். பிறனில் விழைந்த இந்த இந்திரன், முனிவான் வனத்தை நண்ணிப் பலகால் திரிதர வந்தானென்றும், அகலிகையும் கட்கடைத் தூதுபோக்கி அவன்பால் மையலேய் கனற்றினளென்றும் கோசிகன் கூறியது, குறிப்பாலேனும், ஐயமற நிற்கின்றது. ஆயின், இந்திரன் பொய்யிலா உள்ளத்தான்தன் படிவமே கொண்டு புகுவது மிகையன்றோவெனின், தனது உருவத்தோடே கதுமெனச் சென்று நின்றால் அவன் திகைப்புற்று, ஆசையிலும் அச்சமே விஞ்சித் தன்னை விலக்கினும் விலக்கலாகும் என்றோர்ந்து, அன்னவள் மன அமைதியைக் கலைக்காமல் தன்வரவைத் தெரிவித்துக் கொள்ளவதற்குச் செய்தவோர் சிறு கரவு இதுவெனல் அமையும். இவ்வாறு, இந்திரன் வயத்ததாகி அகலிகையின் மனம் முன் பெரும்பகல் சாய்ந்திருந்த தென்பதை வடமொழிநூல் கூறுதுவிட்டிருக்கக் கம்பர் காட்டிக்கொடுத்துவிட்டனர். இதனல் அகலிகை செய்த குற்றத்தின் ஆழம் அதிகமே படுகின்றது. கௌதமனுக்கு மனைவியாய்த் தன் காலத்தைக் கழித்துவந்தாளேனும் நெடுநாளாய்க் கற்பழிந்த சிந்தையோடு உழன்றிருந்தாளென்பது அவள் இன்று செய்தசெய்கையின் கொடுமையைக் கொளுத்திக்காட்டுந் தன்மைத்து. "Every woman is a rake at heart," என்று வாய்கூசாது விளம்பிய ஆங்கிலப் புலவன்தன் கொள்கையைக் கம்பர் இதனல் நிலைநிறுத்தினர் என்று எண்ணநேருமாயின் அது, ஒரு மாசிலா மாதர் எண்ணில் பல்கோடி இன்றும் இருக்கின்ற இவ்வுலகத்திற்கும் அதனை உள்ளவாறு அறிந்துள கம்பருக்கும் பெரும்பழி இழைத்துப் பிழைத்ததாகும். அகலிகை என்னும் ஒருத்தியின் சரித்திரம் இங்குக் கூறப்படுகின்றதே யன்றி எவ்விதக் கொள்கைக்கும் அவள் ஓர் எடுத்துக்காட்டாக இயங்கவில்லை.

அகலிகையின் கண்ணெனும் பூசலம்பு நெறியின் புறஞ்செல்லக் கற்பிலாக் கருத்தோடு முனிவனுக்கு மனைவியாய் அவள் இருந்தாள் என்னுந் தன்மையால் கம்பர்நூலில் இந்திரன் வந்தெய்துவதன்முன் அவளது நிலை வான்மீகத்தைக்காட்டிலும் அதிகமாகப் பழியுண்டு தோன்றுகின்றது. ஆனல், இந்திரன் வந்த சமயத்தில் இதற்கு நேர்மாறுக இவ்விருநூல்களும் நிகழக் காண்கின்றோம். வான்மீகத்தின்படி, முனிவேடத்தோடு இந்திரன் புகுந்தானுனலும், வந்தவுடன் அவனை இந்திரன் என்று அவள் அறிந்துகொண்டாள். அறிந்துகொண்டு, "மதிஞ்சகார துர்மேதா தேவராஜ குதூகலாத்" என்று யாவரும் வெறுக்கும்படி கூறுகின்றார் வான்மீகி. தீயன செய்வதற்கு நினைத்திருப்பவரெல்லாம் அமையம் வாய்த்தவுடன் அதனைச் செய்துவிடுவர் என்பதற்கில்லை. செய்யப்புகுந் தருணத்தில் மனச்சாக்ஷி இடைப்புகுந்து தடுப்பதால் பலநாள் பார்த்திருந்த செவ்வி வந்து எய்தினும் அதனைச்செய்யாது விடுப்பது முற்றிலும் கேடுகெட்ட கயவரல்லாத மாந்தர்தம் அனுபவம். மேற்கொட்டுச்செய்து கைவந்தவள்போல் தீவினை அஞ்சாது அகலிகை இஃதுச் செய்யப்புகுந்தாள் என்பதால் இயற்கையாய் யாவர்க்கும் இடைத்தோன்றும் மனச்சாக்ஷியும் அற்றவோர் இழிவு அவளைச் சேர்கின்றது. எனினும், தையலாள் நயன வேல் இந்திரன்மீது முன் தொட்டுப் பாய்ந்துகொண் டிருந்தது என்று நெடிது

நாள் நெஞ்சில் அழுந்தி வளர்ந்த பாவத்தவள் எனக் கம்பர் காட்டுவதைக் காட்டிலும், சடுதியில் இந்திரனே எதிர்வந்து இன்பத்தை நல்குதற்கு இரந்துநிற்க, உடலன்றி மனதிலும் மெல்லியல் வாய்ந்தவரான மாதர்களுள் ஒருத்தி, முன்பின் யோசியாமல் இணங்கிவிட்டாள் என்னல் ஒரு சிறிது அவள் குற்றத்தைப் பொறுக்கக் கூடியதாயினும் ஆகலாம். ஆதலின், இவ்வகையில் நோக்கினால், அகலிகையின் குற்றத்தைக் கம்பரே வான்மீகியைவிட அதிகமாகக் காட்டுகின்றார் என்று மதிக்க நேர்கின்றது. மற்று, "க்ருதார்த்தே நாந்த ராத்மநா" என்பதால் "வெகுகாலமாக அகலிகைக்கு ஆசையும் இருந்தது; இன்று அவ்வாசை நிறைவேறுகின்ற சமயமும் வாய்த்தது என்னும் குதூகலமும் கொண்டனள்" எனக்கொள்ளலாகுமாயின் இருவிதத்திலும் முன்கண்டவாறு அகலிகை புரிந்தசெயல் மிக்க பழிப்புடையதாகின்றது.

உண்மையில், கம்பரேனும் வான்மீகி முனிவரேனும் அகலிகையின் குற்றத்தைக் குறைக்கவாகிலும் அவள் பழியை மறைக்கவாகிலும் முயன்றிலர். வான்மீகத்தில், விச்வாமித்திரன் இராமனுக்கு அகலிகையின் வரலாற்றைச் சொல்லிவந்தபோது அவள் எதிரி வில்லையாகையால் 'பச்சையாக' அங்கு முன்னும்பின்னும் "க்ருதார்த்தை யாயினேன்" என்று பாராட்டுவது மல்லாமல், வங்கணனை விரைந்தகற்றும் கடையாய வசலிபோல் "கச்ச சீக்கிரம்" என்று போக்குவதும் நேர்கின்றது. தீவினை நயவார் உத்தமர். நயந்தாரேனும் செய்வதற்கு அஞ்சுவார் மத்திமர். செய்தாரேனும் செய்ததற்கு வருந்துவார் அதமர். அகலிகையோ, "க்ருதார்த்தாஸ்மி ஸுரச்ரேஷ்ட கச்சசீக்ரமித ப்ரபோ" என்று முன்னே மனச்சாக்ஷியற்றதுமன்றிப் பின்னும் கழிவிரக்கங் காட்டாதது அதமாதர்மம்.

நிகழ்ந்த நிகழ்ச்சி இவ்வாறாக அதனை, அகலிகையின் முன்னிலையிலேயே விச்வாமித்திரன் செப்பும்படி நாடகம் நிகழ்த்துகின்ற கம்பர் கையாளுந்திறம் மிகவும் அருமையா யிருக்கின்றது. இந்திரனை நயந்து இவள் பண்டைநாள் பலசால் நோக்கியிருக்கலா மாயினும் அவன் வேடத்தைக் கடந்து, வந்தவுடன் அவனை இந்திரனென்று உணர்ந்து கொண்டிலள். கௌதமன் என நினைத்து இணங்கினள். இணங்கி, "அவனோடு காமப் புதுமண மதுவின் தேறல் ஒக்கஉண்டிருக்குங் காலையில்" தன் கணவன் அவன் அல்லன் என்பது அவளுக்குத் தெரியலாயிற்று. தெரிந்தபின் என்செய்தாள்? இச்செய்கை 'தக்கதன்றென்ன ஓராத் தாழ்ந்தனள்', என்றனன் விச்வாமித்திரன். இவ்வாக்கியம், அகலிகையின் குற்றத்தினளவைக் குறைத்துக்காட்டக் கூடியதானவொரு பொருளும், அக்குற்றத்தை அதிகப்படுத்திக் காட்டக் கூடியதான மறுபொருளொன்றும் ஆக இரண்டு பொருள்களைக் கொண்டிருக்கின்றது. "அந்தச் செவ்வியில் அவள், தன் கருத்தைச் செலுத்தி இக்கருமம் தக்கதோ அன்றோ என்று ஆராய்ந்துகொள்ளாமல் மனமற்ற தன்மையில் காலந் தாழ்ந்திருந்தாள், அதற்குள் முனிவனும் முடுகிவந்து விட்டான்" என்னும் பொருளை ஏற்பவரும் அச்செய்கை நன்றென மதித்துப் பாராட்டமாட்டாராயினும், பிழையை ஒருசிறிது பொறுத்தற்கு இசைபவ ராகலாம். இனி, தன் கணவன் அல்லன் அவன் என்று உணர்ந்தபின் 'இக்கருமம் தக்கது அன்றே எனத் தெரிந்தும் அதனை விரும்பினாள்' என்ற பொருளையும் இது ஏற்குமாகையால், அவள் மனமறிந்து அழிந்தவளாதல் திண்ணம். எனின், எந்த உரை இவ்வாசகத்திற்கு ஏற்றதாகும், என்று சிந்திக்குங்காலையில் கோசிகன் இவ்விரு பொருளையும் ஒருங்கே தழுவி இரட்டுறமொழிந்தனனோவென எண்ணும்படி இருக்கிறது. மெய்ந்நின்று முழுதும் வழுவாமலும், எதிர்நின்று கேட்கின்ற அகலிகையின் மனம் ஆற்றாது வருந்தி அழியாமலும், விச்வாமித்திரன் நாவின் நாகரிகங் கருதி இவ்வாறு கூறினன் போலும். ஆயினும் அவ்விச்வமித்திரனாலும் தன் நாவை நெடிதுநேரம் காக்க இயலவில்லை எனபது தெரிகின்றது. ஏனெனில்,

சரந்தரு சாபம் அல்லால் தடுப்பரும் சாபம் வல்ல
வரந்தரு முனிவன் எய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தரம் உலகி னிற்கு நெடும்பழி பூண்டாள் நின்றாள்
புரந்தரன் நடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போகலுற்றான்.

[மற்றவரால் தடுக்கவல்ல அம்புகளை ஏவும் வில்கிடக்க, ஒருவராலும் தடுக்க இயலாத சாபத்தை ஏவவல்ல அந்த அநுக்ரகசிரேஷ்டனான முனிவன் நெருங்கி வந்ததும், எக்காலமும் அழியாமல் இவ்வுலகில் நிற்குமொரு பழியைப் பூண்ட இவள் பயந்துநடுங்கி நின்றாள். இந்திரனும் நடுங்கி ஒரு பூனை உருவத்தை எடுத்துக்கொண்டு ஓடினான்]

என்று மேல் நிகழ்ந்ததைக் கூறும்போது கோசிகன் அவளை, "மாயா உலகினிற்கு நெடும்பழி பூண்டாள்" என்று கூசாமல் சுட்டுகின்றான். அச்சுடுசொல் கேட்பதனினும் கல்லாய்க் கிடத்தலே நலம். முன் தையலாள் நயனவேல் தைத்ததும், பின் அவள் தகவிலாத்தொழில் என ஓர்ந்தே விழைந்திருந்ததும் வாய்மை என்றாற்றான் இத்தகைய வசைக்கு அவள் பாத்திரமாவாள்.

வந்த கௌதமன், "ஆயிர மாதர்க்குள்ள வறிகுறியுனக்கு உண்டாக" வென்று இந்திரனையும், "விலைமகள் அனைய நீயும் கல்லிய லாதி" என்று அகலிகையையும் சபித்துப் பின்னர் அமரர் வேண்டுகோளுக் கிணங்கி புரந்தரனுக்கு இட்டசாபத்தை ஆயிரங் கண்களாக மாற்றியும், அகலிகையின் வேண்டுகோளுக்கிணங்கித் "தசரத ராமனென்பான் கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி" என்று அவளுக்கு விமோசனம் கூறியும் அகன்றனன். இவ்விருவருக்கும் இட்ட சாபவகைகளில் வான்மீகி முனிவருக்கும் கம்பருக்கும் வித்தியாசம் இருக்கின்றது. உருவமற்றவளாய்ச் சாம்பல் மேட்டில் காற்றைக் குடித்துக்கொண்டு கிடக்கும்படி கௌதமன் அவளுக்குச்சாபம் இட்டதாக வான்மீகிமுனிவர் கூறியிருப்பதை விடுத்துக் கம்பர் வேறுசில புராணங்களிற் கூறியுள்ளபடி அவளைக் கருங்கல் லாக்கியது, எம்பெருமானது கழல்துகள் நேராகக் கதுவுதற்கு இயலும்படி அமைந்தது போலும். பரம புருஷனாகிய இராமன் தன் பாததூளியின் பெருமையை நேராகக்காட்ட வேண்டுமென்பது கம்பர் கருத்தாயிருப்பினும் இருக்கலாம். இவ்வகை அகலிகையின் வரலாற்றை இயம்பிவந்த கோசிகன் அதனை முடிப்பவனாய்,

இவ்வண்ண நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரில்
மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன்
கால்வண்ண மிங்குக் கண்டேன்.

[முன் நிகழ்ந்தவிதம் இது — இனி, நீ அவதரித்த பின்பு யாவரும் இவளைப்போல் உன் திருவடியைச் சேர்ந்து மாசுநீங்கித் தூயவராவதன்றி இவ்வுலகத்தில் துயரமென்பது தோன்றலாகுமோ — மேகம்போன்ற நிறத்தையுடைய பெருந்தகை இராமா, மைபோன்ற

கருநிற அரக்கி தாடகையுடன் நீ செய்தபோரில் (துஷ்ட நிக்ரகஞ் செய்யும்) உன் கையின் திறத்தை அங்குக் கண்டேன். அகலிகையின் சாபவிமோசனத்தால் உயிர்களைச் சென்றளிக்கும் உன் பாதங்களின் பெருமையை இங்குக் கண்டேன்.]

என்று உளம்பூரித்து இராமபிரானைப் பாராட்டுகின்றனன். பொருளின் நயம் ஒருபுறமிருக்க, ஓதுவோர் மனதை ஓசையாலேயே கவரும் கம்பர் பாசுரங்களில் இது வொன்று. வில்லிபுத்தூராரும் இதனழகில் ஈடுபட்டு, உயர்ந்தனவற்றை எங்கிருந்தும் எடுத்துத் தாம் அமைத்துக்கொள்ளும் உரிமை புலவர்களுக் கிருக்கின்ற தாகையால், பாரதத்தில், பன்னிரண்டாம் போர்ச் சருக்கத்திற்குக் கடவுள் வணக்கமாக, இக்கருத்தைத்தழுவி,

பொய்யாத தவமுனிபின் போயருளித் தாடகைதன்
மெய்யாவ நிகரென்ன வெஞ்சரத்தா லழுத்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலு மொருசாபங் காலாலு மொருசாபம்

[பொய்யிலாத தவமுடைய முனிவன்பின் சென்று அருளித் தாடகையின் உடலில் தனது அம்புறாத்தூணியில் வைப்பதுபோல் அம்பைவைத் தழுத்தியபின் கரிய கடலும் முகிலும் போன்ற நிறமுடைய ஸ்ரீ இராமபிரான் வாங்கியன (வாங்குதல் - வளைத்தல், நீக்குதல்) அழகிய தாமரைபோன்ற கையால் ஒருசாபம் (சிவன் வில்) காலால் ஒருசாபம் (அகலிகையின் சாபம்)]

என்று மனமகிழ்ந்து பாடுகின்றார்.

இதுவரையில் நிகழ்ந்ததைக் கோசிகன் கூறிமுடித்தானனும் அகலிகையை அழைத்துப்போய் அவள் நாயகனிடத்தில் சேர்க்கவேண்டிய தொன்று இன்னும் இருக்கின்றது. அதனைக் கம்பர் கூறுகின்றார் இனி.

தீதிலா வுதவி செய்த
சேவடிக் கரிய செம்மல்
கோதிலாக் குணத்தான் சொன்ன
பொருளெலா மனத்திற் கொண்டு
மாதவ னருளுண் டாக
வழிபடு படரு றாதே
போதுநீ யன்னை யென்று
பொன்னடி வணங்கிப் போனான்

[மாசெலாம் அகலும் வண்ணம் அரியதோர் உதவி செய்த சிவந்த பாதங்களையுடைய கரிய இராமன், குற்றமற்ற குணமுடைய கோசிகன் சொன்னவைகளின் உட்பொருளெல்லாம் தன் மனதிற்கொண்டு, அகலிகையைப் பார்த்து, "அன்னையே, சென்றது கருதி வருந்தாதே. உன் கணவனின் அருளுண்டாகும்படி அவனுக்கு வழிபாடுகள் இயற்று. வா போவோம்" என்று அவளைத் தேற்றி யழைத்துக்கொண்டு விச்வாமித்திரனது பொன்போன்ற பாதங்களை வணங்கிப் புறப்பட்டான்.]

அருந்தவ னுறையுள் தன்னை
அனையவ ரணுக லோடும்
விருந்தினர் தம்மைக் காணா
மெய்ம்முனி வியந்த நெஞ்சன்
பரிந்தெதிர் கொண்டு புக்குக்
கடன்முறை பழுது றாமல்
புரிந்தபின் காதி செம்மல்
புனிதமா தவனை நோக்கி
அஞ்சன வண்ணத் தான்றன்
அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் முன்னை
வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பி லாளை
நீயழைத் திடுக வென்னக்
கஞ்சமா முனிவ னன்ன
முனிவனுங் கருத்துட் கொண்டான்.

[அந்நால்வரும் கௌதமருடைய ஆச்ரமத்தை அடைந்ததும், அந்த மெய்யுணர்வுடைய முனிவன் விருந்தினர் வரக்கண்டு வியப்படைந்து, அன்போடு எதிர்சென்று அழைத்துவந்து செய்யவேண்டிய உபசாரங்களை எல்லாம் செவ்விதின் செய்தபின் விச்வாமித்திரன் அந்த பரிசுத்தமான தவமுடைய கௌதமனைப் பார்த்து, "மைந்நிறமுடைய இவனது அடியின் துகள் பட்ட மாத்திரத்திலேயே கொடிபோன்ற இடையை உடைய இவள் பழைய உருவமும் தன்மையையும் பெற்றவளாகி நின்றாள். மனப்பூர்வமாக ஒரு குற்றமும் செய்திராத இவளை நீ வெறுக்காமல் ஏற்றுக்கொளல் வேண்டும்" என்றுகூற, நான்முகனுக்கு நிகரான கௌதம முனிவனும் கோசிகன் குறிப்பை உணர்ந்து கொண்டான்]

நெஞ்சினால் பிழைத்தல் இன்னும் எப்படி இருக்குமோ! 'தையலாள் நயனவேல்' இந்திரன்பால் பாய்ந்ததென்று துவக்கி, 'நிரந்தரம் உலகினிற்கு நெடும்பழி பூண்டாள்' என்று இடையே சுட்டிக்காட்டிய கோசிகன் இங்கே அவளை 'நெஞ்சினால் பிழைப் பிலாதாள்' என்று துணிந்து கூறுவது வியப்பிற் கிடமாயிருக்கலாமாயினும் கடக்கரிய, மூரணொன்றும் இதனிற் காண்பதற்கு நிமித்தமில்லை. முன்னே, 'தக்கதன்று என்ன ஓராத் தாழ்ந்தனள்' என்று நாகரிகத்தால் தன் நாவை மெதுப்படுத்திப் பகர்ந்ததுபோன்றே இங்குக் கௌதமனிடத்தில் அவளுக்காக இவ்விதம் பரிந்து பேசுகின்றான் கோசிகன். மற்றிது பொய்யன்றோ என்பவர்க்குப், "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என வள்ளுவரே வந்து விடைகூறுவர். அதுவுமன்றி, "ஐய, உனக்கும் எனக்கும் உற்றது தெரியுமெனினும், உலகம் இவளை நெஞ்சினால் பிழைப் பிலாதாள் என்றே மதிக்கும். ஆதல் அவளை நீ ஏற்றுக் கொள்வதற்கு நாண வேண்டா" எனச் சங்கேதமாய்க் கோசிகன் கூறினன் என்பதும் அமையும். கஞ்சமா முனிவனன்ன கௌதமனும் கருத்துட் கொண்டன இவைகளையே.

இப்படலத்தின் இறுதிச்செய்யுள் கவிக் கூற்று. அகலிகை செய்தியின் தத்துவம் அதனில் அடங்கியிருக்கின்றது. கூறுவார் கம்பர்,

குணங்களா லுயர்ந்த வள்ளல்
கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண் டேத்தி
மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண்
டருந்தவ னோடும் வாச
மணங்கிளர் சோலை நீங்கி
மணிமதிற் கிடக்கை கண்டான்.

[எல்லாக்குணங்களாலும் நிறைந்த சிறப்புடையவனும் ஈகையில் மிகுந்தவனுமான இராமன், கோதமனது பாத மலர்களை வணங்கிப் பிரதக்ஷிணஞ் செய்து துதித்து குற்றமற்ற கற்பிற் சிறந்த அகலிகையை அவன் கையில் அளித்துவிட்டு, விச்வாமித்திரனுடன் மணங் கமழ்கின்ற அச்சோலையை விட்டகன்று மிதிலையின் மணிகளிழைத்த மதிலைக் கண்டான்]

அகலிகைக்கு இழிவாகக் கூறுவதெல்லாம் குறைவறக் கூறிவிட்டுப் பிறகு 'நெஞ்சினால் பிழைப்பிலாள்" என்று கோசிகன்தான் கண்துடைத்தான் என்றால், கம்பரோ அவளைக் கடைசியில் "மாசறு கற்பின் மிக்க அணங்கே' ஆக்கிவிட்டார். "மனையின் மாட்சியை அழித்து இழிமாதவப் பன்னி" என்று ஆரம்பித்தவர் இவர்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[965-ம் பக்கத் தொடர்ச்சி]

• முடிந்தது முடித்தல்.

2. சீகாளத்திப் புராணம்.

இவர் இவ்வாறிருப்ப, வேடர்கள் தமது தலைவரைக் காணாது சாலவும் அச்சம் கொண்டு காடெலாம் தேடிப் பின்னவ் வாலமரத்தடியிலே அண்ணலெதிரே நீலமால் வரைபோல நின்ற திண்ணனாரைக் கண்டார்கள். (சீ. 114) அருகு சென்றடைந்து "ஐய! நீ எங்களை அகன்று இப்பெரிய மால்வரை அடைந்ததென்? பிழை செய்தோமோ! பரிதி வானவன் நண்பகல் கடந்தனன். பசித்தாய் முருக! இவ்வுழி நிற்பதென்? வருக" என வேண்டினார்கள். (சீ 115) அவர் எதிர்மொழி கொடாமையால் தம்மீது சினங்கொண்டார் என எண்ணிப் "பெருந்தகாய்! உனக்கு எங்கள்மேல் முனிவுஎன்கொல்! பேசாய். வள்ளால், வருந்தி நீ இவண் வந்தமை நின்னடி அறிய அறிந்திலம்" என்று இசைத்தார்கள் (சீ 116). மற்று அதற்கும்ஒன்றுஉரையாதிருக்க,மறவர்கள்"கொற்ற வில்லுடைக் குரிசில்! நீ உளத்தில் என் கொண்டாய்? சற்றும் எம்மிடத் தன்பிலை ஆயினை தலைவ! குற்றம் எம் வயின் கண்டதுண்டேல் பிற கூறாய்" என்று இரங்கி வேண்டிப் (சீ 117) பற்பல திறத்தினால் உரைக்கவும் திண்ணனார் ஒன்றும் வாய் திறந்தாரலர். ஓவியம்போலக் குன்றவில்லியை நோக்கி நின்றார். அதுகண்ட மறவர்கள் "இது நம்மேல் எழுந்த சினத்தால் ஆயதன்று. இது என்னோ?" என மருண்டார்கள் (சீ 117). "இங்கு நின்ற இத்தெய்வம் இவனிடத் தேறித்தங்கி நின்றதோ என்கொலோ அறியோம்.ஊர்க்கு நம்மொடுவருபவனாகக் காணோம். அந்தோ! நங்கள் தொல்குலத் தலைவன் நாகனுக்கு என்னுரைப்போம் (சீ 119). தந்தை'மத்தயானை போல் என் மகன் எங்கு' எனில் மறுசொல் எத்திறத்தினால் சொல்லுவோம்", என்று பலவாறு இரங்கி எய்த்து வசிக்க ஓர் உபாயமும் இல்லாதவராகி நின்றார்கள். பின்னர் "நாகனோடு இச் செயல் கூறி அழைத்து வந்தோமாகில் அவன் எத்திறத்தானும் பிழைக்குமாறு இயற்றுவான்" எனத் துணிந்தார்கள்; அவ்விடம் விட்டுப் பெயர்ந்தார்கள். (சீ. 121.) இயற்கையில் தன மதலையை இழந்ததாயானவள் எங்ஙனம் இரங்குவாளோ அவ்வாறு இரங்கிக் கேட்பதுபோல் வேடர்கள் எண்ணிப் புலம்புவதை அடிகள் அழகாகக் கூறுகின்றார். சேக்கிழாரோ உவகைச்சுவை ஊற்றெடுக்கும் அன்பின் கதையைப் பாடுகின்றார். ஆதலின் பெற்றோர் படும் துன்பத்தினை எடுத்துரையாது போகின்றார். "தழைத் தலைப்புலால் நாறும்வாய்ச் செய்யகட் சவரர்" என்று வேடரையும் இயற்கைவழியே புனைந்து பாடுகின்றார்.

அன்னகாலையில் ஆயிரம் கதிர்ச்சுடரர் அரசனும், திண்ணனார் அன்பினை அப்புறத் துலகெலாம் வழங்கப் பண்ணுவதற்காகப் போதல் போல மேற்றிசை மலையில் மறைந்தான். இருளும் பரவியது. (சீ. 122.) கதிரவன் கடலில் மூழ்கியுங்கூட அரவுமிழ்ந்த செம்மணிக்கணம் இமைத்தலால் அங்குக் கங்குல் என்பதில்லை. "இருள் கெடச் சுடர்விரிதரு விலைவரம்பில்லா உருவமாமணி பலவுள இடத்து இரவு உண்டோ" என்று வேற்றுப் பொருள் வைப்பாகக் கூறியதில் இரவு என்பதற்கு இரா என்றும், ஐயமேற்றல் என்றும் பொருள்பட இரட்டுற மொழிந்து சொன்னேக்கில் ஓர் நயம் தோன்றப் பாடுகின்றார் அடிகள் (சீ 123). அவ்விரவில் அண்ணலைக் கொடுவிலங்குகள் குறுகுதல் அஞ்சி, அம்புதொடுத்த வில்லொடு மறந்தும் கண்ணிமைத் திலராகியே வைகறை காறும் இறைமருங்கு நின்றார். (சீ 124) அன்பர் அன்பினுக்கு அகப்படு பொருளாழியாகிய பெருமானுக்கு இன்பவூன் திருவமுது கொண்டுவர எண்ணித் திண்ணனார் வைகறைப் போதானதும் பொன்பரந் தொளிர் மால் வரைச் சாரலிற் போயினார் (சீ 125). நம்பியின் வேட்டை காண விரும்பி வருவதுபோலச் சுடர்க்கோமானும் திரைக்கட லெழுந்தான். (சீ 126)

"சிங்கமன்னான் செயல் நிற்க மற்று இனிக் கங்கை வார் சடைக் கண்ணுதல் தாள்முதல் தங்கு நெஞ்சத்தவன் செயல் சாற்றுவாம்" என நுதலிப்புகுந்து சேக்கிழார் புகழ்ந்துரைக்கும் சிவகோசரியாரின் நிலையை உள்ளவாறறிந்து புகழ்ந்துரைக்கின்றார் அடிகள்.

> அருளும் ஆனைப் பொறையும் அறிவொடு
> தெருளும் நோன்பும் சிவனிடத் தன்பினோடு
> இருளில் தீர்அவா வின்மையும் கல்வியும்
> மருள் இல் மெய்மையும் மாண்உரு வாயினான்.
> வெறுப்பில் சந்தனம் மெய்யெலாம் பூசினின்
> திறப்ப இன்பம் இயற்றுநர் தங்களும்
> கறுத்தெ ழுந்தெதிர் காயழற் பெய்துதுன்
> புறுத்து வார்களும் ஒத்த உளத்தினான்.
> நீடுங் கார்க்குழ லீனரி வாள்விழி
> வாடும் சிற்றிடை மாதர்கள் புல்லினும்
> நாடும் தன்னுளம் தாயென நண்ணுவான்
> ஓடும் பொன்னும் ஒருநிகர் நோக்குவான்.
> ஈச னார்தம் இணையடித் தாமரைப்
> பூசை செய்தொழி லாப்பூண்டு செய்திடும்
> ஆசை மேல்கொண் டாறுமனத் தான்சிவ
> கோச னென்னும் குணப்பெருங் குன்றனான்.

என்று சேக்கிழார் பிறஇடங்களில் தொகுத்துவைத்த சொற்றொடர்களின் எதிரொலி நிரம்பப் பாடுகின்றார் அடிகள். இனி இச்சிவகோசரியார், இரவி வந்தெழு முன்னம், எழுந்துபோய்ப் புனல்மூழ்கி, விதிமுறையே விரைசெய் போதொடு மென்புனலும் கொடு புரிசடைப் பிரானைப் பூசிப்ப எய்தினார். (சீ 122) வில்லும் அம்பும் கல்லையும் கையுமாக மலரும் நீரும் கொண்டுவந்த திண்ணனாரைப் புனைந்துரைத்ததுபோலச் சிவகோசரியார் பூவும் புனலும் கொண்டு வருகின்ற நிலையையும் புனைந்துரைக்கின்றார் அடிகள்.

> தலைமி சைத்திரு மஞ்சனம் தாங்குபு
> மலர்பெய் கூடையும் ஏந்துபு வல்வினை
> விலகும் அண்ணல்தன் நாமம் விளம்புபு
> புலவன் ஐயன் திருமுன்பு போயினான். (சீ 133)

எனப் பாடல் காண்க. எதிர் சென்றவர் இறைவன் திருமுன்பெல்லாம், ஊன் கிடத்தல் கண்டு நடுங்கினார். தாம் குதித்து அயல் ஓடினார். (சீ 134) "விண்ணோரும் முடிவணங்கும் பெருமான் திருமுன்னர் ஆ! ஆ! இக் கொடும்பாவம் ஆர் செய்தார்? இது செய்யத் தேவாதி தேவனார் திருவுள்ளம் இசைந்தாரோ? (சீ. 135) கொல்லாமை முதலியவே குணமாகக் கொண்டொழுகும் பொல்லாத சிலைவேடப் புலைனோ இது செய்வார். ஒல்லாத செயல் இதனை அன்புடையோர்கள் கண்டக்கால் நில்லாமல் இறந்திடுவர். யானோ கொடுவினையேனாதலின் இன்னும் நிற்கின்றேன்" (சீ. 136) என்று பலபல கூறி அழுதுஇரங்கினார். பூசைகாலம் மிகத்தாழ்க்கத் தாம் நிற்பதால் பயனென்னே என நினைந்துப் புலவெல்லாம் நன்றாக அலகால் துடைத்து ஆப்பிநீர் தெளித்தார். (137) பெருந்தீர்த்தம் படிந்தாடி, மறைமந்திரத்தால் தூயதன்மை கடிந்தபின்னர், உருத்திரசமக நமகத்தால் புனலாட்டித் திருமலர்கொண் டருச்சித்தார். (138) திண்ணனார் தொழுது நின்ற நிலையைப் புனைந்துரைத்தது போலச் சிவகோசரியார் தொழுது நின்ற நிலையையும் அடிகள் புகழ்கின்றார்.

> முன்னர்நின்று கைதலைமேல் முகிழ்த்திருகண் நீர்பாயத்
> துன்னியமெய்ம் மயிர்பொடிப்பச் சுடுதழல்வாய்ப் பட்ட
> கென்னமனம் நனியுருகி இளகிமிக நாத்தழும்ப [அரக்
> மன்னுமன னொடுசாம மறைக்கீதம் பாடினான்.

எனப் பாடுகின்றார். பின்னர் மறையவர் பற்பலகால் வலஞ்செய்து பணிந்துஅரிதின் நீங்கிப்போய்த் தம்மிடத் தடைந்தார். (சீ 140)

திண்ணனாரோ, ஏறுகாற் பன்றி சென்று வழியறிந்து ஒளிநின்றெய்தும், மான்றுயில் இடனறிந் தெய்தும் முன்போல் உறுசுவை யமுதமைத்தார் (சீ 141). பின்பு கோற்றேன் நிரம்பப் பெய்துகொண்டு, இறைபசிக்கும் என்பதாற்றாது, தாம் விடும் அம்பென விரைந்தோடி முன்போல் பூசைமுற்றி இன்னமுதருத்தி, அருகு நீங்காது நின்றார் அன்பினால் கடலே அன்னார் (சீ 142). அந்த வேலையில் தந்தையும் தாயும் இவர் செய்தியைக் கேட்டுத் தணிப்பரும் கலுழ்ச்சிகொண்டு இவரிடம் வந்தனர். வந்து பற்பல திறத்தால் வசிப்பவும் வசமாகாது போகவே சிந்தை நொந்து, "இனி என் செய்வது" என்று மகனை விட்டுச் சென்றனர். "கைவிடார்" என்று சேக்கிழார் கூறியதில் உள்ள பொருள்ஆழம் இப்பாட்டில் இல்லை என்று சொல்லவும் வேண்டுமோ. நிற்க, அன்னவர் அடைந்தவாறும் அகன்றதும் அறியாது அண்ணலுடன் பிணித்த நெஞ்சொடு பகற்போதில் விலங்கினீட்டம் கொன்று இறைக்கு அமுதருத்தியும், இரவில் துஞ்சாது தொண்டுசெய்தும் ஒழுகி வந்தார்.

வழுவறு முனிவனாரும் வைகலும் வந்து திருமுன்பு எல்லாம் ஊன்கண்டு அழுதழுதிரங்கி ஏங்குவார்; அவற்றை அகற்றிப் புனிதம் செய்து பூசித்து மனம் துயர்க்கடலி னாழ்த்தினார். அவர் உறுதுயர் ஒழித்தல் வேண்டி (சீ 145) ஐந்தாம்நாள் இரவு அவர் கனவிடை இறைவன் தோன்றி இவ்வாறு சொல்லினார் "தவத்துறை யியன்ற மேலோய்! இங்கு நீ நம்முன் கண்டது இறைச்சி என்று அழுங்காதே. அங்கது நாம் அருந்தும் அரும்பெறல் அமுதம் அதனை நமக்கிடுவோன் செய்தி அறைவோம் கேள். தெய்வநதி படிந்து நோற்றும் பல தானங்கள் செய்தும் விதியையும் வென்றுபெற்ற எழில் மகன்மேல் தாய்க்குப் புதிய அன்பு எவ்வளவு உண்டோ அவ்வளவு அன்பு என்மேல் அவனுக்கு உண்டு. (சீ 147)

> மற்றவன் செருப்புக் காலால் மணங்கமழ் நமதுசென்னி
> உற்றபூ மாற்றும் காலத் துடம்பெலாம் மயிர்பொ டிப்ப
> சிற்றின மகன்பூங்கையால் திருமுலைவருடப்பட்ட [அன்ப
> பெற்றதாய் என்ன நெஞ்சம் பெரிதுரு குதுமால் (148)!
>
> ஐந்தடர் முனிவ!நம்மேல் அவன்உமிழ் கின்றது யாற்றுள்
> தந்தநீர் ஆயின் அன்றே, தாழ்சடை முனிவர் ஆட்டும்
> நந்துமந்திர நன்னீரின் நனிஇனிது எனலாம், உள்நின்று
> உந்திமேல்எழுந்து பொங்கி ஒழுகியபேரன் பாமால்(149)
>
> வன்னுகிர்உழுவைநோன்தாள் மாதவக்கிழவன்முன்னோர்
> ஒள்ளிய வாழ்த்தும் நாமம் ஓராயிரம் உரைத்துச்சாத்தும்
> கள்ளவிழ் மலரின்அன்னான் கழுத்துற வளைத்துச்சூட்டும்
> எள்ளுறு மயிர்கள் சூழ்ந்த ஈர்ம்மலர் எமக்கு நல்ல (150)
>
> இந்திரன் முதலோர் செம்பொன் எரிமணிக் கலத்தில்
> மந்தா வரையின் ஆழி மதித்தஆரமுதம் எல்லாம் [ஏந்து
> உந்துதன் வாய்ப்பெய்த்தாய்ந்தமுழுச்சுவைச் சூடிறைச்சி
> வெந்திறல் தந்த பின்னர் வேம்பொடு கடுவும்மான (151)
>
> ஏசுதல் இலாத அறத்தோய் ! எமக்கவன் எம்முன்நின்று
> மாசில்பேர் அன்பினோடு வாய்திறந் துரைக்கும் சொற்
> ஆசகல் அறிவின் மிக்க ஐம்புலப் பகைவர் பாடும் [போல்
> காசறு சாம வேத கானமும் இனிய தன்றே. (152)
>
> அவன்மனம் நமக்குக் கோயில் அவனுரைபலவும் ஓத்தாம்
> அவன்முயல் தொழில்கள் எல்லாம் அறத்தொழில் ஐயம்
> [இல்லை

என்று புகழ்ந்து "அவனியல் காட்டுகின்றோம் அன்ப ! நீ நாளையே வந்து அவனறியாத வண்ணம் அயல் ஒளித்திருதி ! (சீ. 153) இனித்துயர் ஒழிதி" என்று இன்னன பலவும் கூறி இறைவன் மறைந்தருளினான். சிவகோசமுனியும் எழுந்து இறைவன் சொன்ன மொழி நினைந்து அதிசயித்தார். (156) ஞாயிறு குணதுகுன்றம் நண்ணுதற்கு முன்னமேபோய் முகரி நன்னீர் படிந்து நித்தியம் நிரப்பி, ஆயிரம் பெயரினானை அருச்சனை முடித்துத் தாயநல் இலிங்கத்தின்பின் தோன்றிடாது ஒளித்திருந்தார். (சீ. 155.)

அடிகள்,சிவபெருமான் எடுத்துரைப்பனவாகக் கூறிய உவமைகள் இனிமை கெழுமியனவாகவும் சுவை ததும்பியனவாகவும் புதுமை நிரம்பியனவாகவும் விளங்குகின்றன. நதிபல படிந்தும் தானங்கள் செய்தும் விதிபுறங் கண்டு பெற்றமெல் எழில் மகனையும் தாயையும் பற்றிச் சேக்கிழார் கண்ணப்பர் கதைபாடுகின்றார். இவ்வன்பினை வற்புறுத்தி அதனைவிட்டுக் கடவுளிடத்துக் காதல் கொண்ட கண்ணப்பரின் பேரின்பினை பாடப் பெரிதும் புகழ்கின்றார். அதனை அடிகள் அவ்வாறு வற்புறுத்தாமற் போனாலும் அவ்வன்பினைத் தாமும் அறிந்துள்ள அருமையினை இவ்வாறு உவமையாகப் பாராட்டுகின்றார். சேக்கிழார்பெருமான் கூறுகின்றஉவமைகள்இறைவனே இயம்பத் தகுந்தவையாய், இடத்திற் கேற்றவையாய் இருத்தலை இன்னுமொருமுறை எடுத்துரைக்க வேண்டுமோ? சேயடியில் விருப்புடைத்தால், என்று திண்ணனாரின் செருப்படிக்குச் சிவபெருமான் கண்ட உவமை அவர் ஒருவரே அறிந்ததொன்று. தான் குழந்தையில் பாலுண்ணுகையில் தாயானவள் மயிர் பொடித்து நின்று உருகுவதை எல்லாமாகி எல்லாம் உணர்ந்த இறைவர் அறியாதவர் அல்லர்; எனினும் அவ்வுவமை ஒரு தாயின் திருவாயினின்று வருமானால் சிறப்புடையதாகும்; தானுணர்ந்ததைக் கூறியதாகித் தகுதிபெரிதும் உடையதுமாகும். "ஒரு முனிவன் செவியுமிழும் உயர்கங்கை" என்ற சொற்போக்கின் தகுதியையும் பொருள் நோக்கின் பொருத்தத்தையும் என்ன என்று சொல்வோம்! "அவன் ஆட்டுவது நீராயின் அன்றே முனிவராட்டு நீரொடு வைத்து ஒற்றுமை வேற்றுமை கூற இயலும்; அவன் ஆட்டுவது உள்ளிருந்து பொங்கி ஒழுகும் பேரன்பன்றோ" என்று புகழ்கின்றார் அடிகள். திண்ணனார் சூட்டிய மலர்க்குப் பொருத்த முள்ளதோர் புதிய உவமையே கூறுகின்றார் அடிகள். பெருமானுக்கு மலர் பறிக்க வேண்டுமென்றே நோன்பு நோற்றும், புலிக்கால் பெற்ற பேறிவானாகி வியாக்ரபாதர் பறித்து அன்பாம் திருக்கூத்தனைக் கண்டு களித்துப் போராயிரம் பரவிப் போற்றுவதை உவமை கொண்டமை நயமுடையதாகும். தீயின் வாயில் இட்டு எச்சிலாகிய அவியினும் தாழ்ந்ததோ திண்ணன் வாயிலிட்ட இறைச்சி

என்கின்றார் சேக்கிழார். அடிகளோ, ஆழிகடைந்தெடுத்த அமுதினையும் வேம்பொடு கடுவாக்கும் அத்துணை இனியதென்று புகழ்ந்து சுடச்சுட நின்ற இறைச்சியைப் புனைந்துரைக்கின்றார். முடிந்தது முடித்தலாக "அவன் மனம் நமக்குக் கோயில். அவனுரை பலவும் ஒத்தம். அவன் முயல்தொழிகள் எல்லாம் அறத்தொழில்" என்று அடிகள் கூறுவதும் அழகுடையதே. சேக்கிழாரோ திண்ணனார் அறிவு: சிவனறிவு என்றும், அவர் தொழில் சிவத்தொழில் என்றும் கோயிலும் கடவுளுமாக இரண்டாக நின்ற நிலையை விட்டு, மேலே ஒருபடி சென்று இரண்டறக் கலந்து ஒன்றாய் நின்ற தனி நிலையைப் புகழ்கின்றார். இது நிற்க.

வேட்டையாடச்சென்ற திண்ணனாரும் புனிதனுக்கமுதம்கொண்டு பொருக்கென மீண்டார்; துன்பம் காட்டும் பற்பல நிமித்தம் கண்டார். (சீ 156) "என்னை! பாவம் யான் கண்ட எல்லாம் குருதி காட்டும். எனக்கு அமுதமாய் முத்தமாய் என் கண்மணியாகி என்னுயிராகவும் விளங்கும் அழகன் என்னுற்றானோ? அறியேனே" (சீ 157) என்று மனங்கலங்கி ஓய்யென்று, போயினார். புனிதன் மற்றவர் அன்பெல்லாம் புண்ணிய முனிக்குக் காட்ட நினைந்து தன் வலக்கண் செம்புண் நீருற நின்றான்; கண்டார் திண்ணனாரும். (சீ 158) காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதற, அம்பும் சிலையும் வீழக், குஞ்சிப்பூ இறைய, ஆட்டுநாண் தொடர் அற்றகாலை நாடகப் பாவைபோலத் துண்ணென நிலத்து வீழ்ந்தார். (சீ 159) நெடும்பொழுது உள்ளுயிர்ப்பு நின்று உயிர் உலர்ந்தார் என்னக் கிடந்தார். பின் தன்நினைவடைந்து எழுந்து துயரில் ஆழ்ந்து, உருமேறுண்ட மடங்கல்போலக் கண்ணீர் வார வாய்விட் டலறினார். (சீ 160) தடக்கையால் தன் முகமெலாம் குருதி பொங்கி ஒழுக அடித்துக் கொண்டார். கண்ணீர் வெள்ளமாகப் பொங்கி அவரைப் போர்த்தது. துயரக்கடலில் ஆழ்ந்தார். எழில்கனி மார்புவீங்க எற்றினார்; தலைபிளக்கக் கல்லொடு மோதினார். (சீ 161)

ஓடுவன் மீள்வன் வீழ்வன் உருள்குவன் எழுந்து விம்மல்
நீடுவன் அந்தோ என்பன்நெட்டுயிர்ப் பெறிவன் நெஞ்சம்
வாடுவன்பொங்கிப்பொங்கிவாய்விட்டுமுகத்தைக்கையால்
மூடுவன் அழுவன் கைகண் மோதுவன் கற்க ளோடே
(சீ 162)

கைக்கிளை ஒழுக்கத்தில் தமது விருப்பம் நிறைவேறாதபோது இவ்வாறெல்லாம் கலக்கமெய்தி மடலேறுவர். இந்த நிலையைக் "கலக்கம்" என்பர் தொல்காப்பியனார். அடிகள் கூறிவரும் கதை கைக்கிளைஒழுக்கத்தைப் போன்றதென்பதை இஃதொன்றும் வற்புறுத்தும். நிற்க "எவ்வழில் எந்தையார்க்கு இங்கு இது வந்ததென்? வேட்டுவரானோ விலங்கினானோ யாதென அறிதல் தேற்றேன். அவ்வுறு தெவ்வைக் காணில் ஆவிகூட் டுண்கிலேனோ! (163) மலை இடை எனக்கு வாய்த்த மாகதமணியே! செம்பொ னிலகொளிக் குன்றே! எந்தாய்! எம்பிரான்! நின்கண் புண்ணீர் கலுழ்தற்கு என்னைகொல்லோ காரணம்? திருவாய் சற்றும் மலர்கிலை என்கொல்" என்று பரிந்துரைத்துப் பதைபதைத்து ஆவி சோர்ந்து ஆண்டவனருகே சென்றார் (சீ. 164) கையினிற் துடைத்தார். அக்குருதி பல்கால் காலுதல் தவிராதாக ஐயனைத்தழுவிக் கொண்டார். நெடும்போதெல்லாம் அலறினார். பின்பு பையெனவிடுத்துப் "பச்சிலை மருந்து தந்து பெய்யில் நோய்தீரும்" என்று மருந்துகொய்யப் பெயர்ந்தனர். (165) கானெலாம் புகுந்து சென்று, கண்டன எல்லாம் கொய்து கொண்டு விரைக்தோடிவந்து விழியிடைப் பெய்தார். சோரிதான் நில்லாவண்ணம்கண்டார்; தலையன்பர் ஆவி சோர்ந்தார் (166) "யான் இனி இதற்கு என் செய்வேன்" என எண்ணி நின்றார். "ஊனுக்கு ஊன்" என்னும் உரை நினைவிற்கு வரவே, தம் கண் வாங்கி வானவன் தடம் கண் இட்டால் மாறும் என்று உள்ளம் வலித்துக் கானவர்பெருமானார் தம் கண்ணைக் கணையினால் இடந்திட்டார் (167). இடந்த கண்ணை இறைவனார் கண்ணில் அப்பினதும் மடந்தையோர் பங்கன் சோரி மாற்றினான்; அதனைக் கண்டார். அடங்கரு மகிழ்ச்சி என்னும் ஆழ்கடலதனுள் தாழ்ந்து தோள் கொட்டி யார்த்தார். கொட்டியதோளை கொட்டுதற்கேற்ப முழவெனப் புகழ்வர் அடிகள். (சீ 168) ஓடினார் திசைகள் எல்லாம்; உடம்பெலாம் குலுங்க நக்கார்; வாயில் வந்தபடிஎலாம் பாடினார்; கைகள் கொட்டி ஆடினார்; துள்ளித்துள்ளி ஆரவாரித்தார். நின்று "நாடி நான் செய்த செய்கை நன்று நன்று" எனவியந்தார். (சீ 169) இன்னணம், உவகை வெள்ளத்திடை அவர் உலாவும் வேளையில் பின்னும் முதிர்ந்த பேரன்பு காட்டக் கடவுள் செந்நிறக் குருதி மற்றைத் திருவிழியிலும் சோர்வித்தான். அன்னது இவாது ஆர்வ ஆர்கலியைக் குடித்தது. (சீ 170) எரி நிரயத்துள் நின்றும் எறித் துறக்கம் புக்கான் ஒருவன் மற்றதனுள்ளே பின்னும் வீழ்ந்தது போல உவகைமாறிக் கரையிலாத் துன்பவெள்ளக் கடலினுள் அழுந்தினார்; ஏங்கினார். பின்னர் மருந்து கைகண்டமையால் தெளிந்தார். (சீ 171) "இன்னும் ஓர் கண் எனக்கு உண்டு. ஆதலின் இதற்கஞ்சேன்" என்று உறுதிகூறிக் கண்ணிடந்த ஐயர் கண் அறிதற்காகத் தமது செருப்புக்காலைத் தம்பிரான் கண்ணினூன்றி அம்பினைத் தமது கண்ணில் வைத்தார். பிரான் அது பொறுக்கல் ஆற்றான் (172) மறைமொழி பிறந்த தம் வாய்மலர் திறந்து அருட்பேராழி இறைவர் "கண்ணப்ப நிற்க" என முக்கால் மொழிந்துகொண்டு கையினைப் பிடித்தார். இந்த நிலையில் சேக்கிழார் இறைவனது நாக கங்கணத்தை எடுத்துரைப்பது போல அடிகளும் கறையணற் கங்கணத்தைப் புகழ்கின்றார். நிற்க, வானவர் பூமாரி பெய்தனர். (173) குன்றவர் பெருமானார் தமது கையில் நின்ற கூர்க்கணையை விட்டெறிந்து கண்ணுதல் அடிப்பூங்கஞ்சம் தம் தலைமிசை புனைந்தார். சைவவைதிகரும் இறும்பூதொன்றிய உளத்தாகி ஒருதனி முதல்வனைத் தாழ்ந்தார். (174) அக் கைதவமிலாரை எம்பிரான் கருணையங்கண்ணால் நோக்கி, மெய்தழல் நடுவண் நின்று விரிவற மனமொடுக்கிச் செய்தவர் தமக்குங்கிட்டாத் திருவுருக் கலந்து கொண்டான். (175) அண்ணல் சொல்லிய "கண்ணப்ப" என் பதனையே திண்ணனார் பெயராக அன்றைநாள் முதலாக வையம் சொல்லும். மற்றொருமுறை திண்ணனாது நாட்டைச் "சுடர்மதிக் காந்தம் வேடர் சிற்றிடை நலார் முகத்தைத் திங்கள் என்று ஒழுக்கும் தெண்ணீர் உற்று அருவிகளாய்த் தாழும் உயர்மலை" என்று புனைந்துரைத்து அடிகள் தமது கதையினை முடிக்கின்றார்.

கதையின் முடிவிலும் சேக்கிழார் ஒரு நுட்பம் காட்டுகின்றார். திருவுருக்கலந்து சிறப்பெய்துவதை அவர் கூறார். திருவுருக் கலந்துதான் சிவனாகவேண்டும் என்றதோர் முறை இல்லாமையால் அவரை உலகின் நின்றும் அப்பாலுக்கப்பால் அனுப்புவதாக இருந்தாலும் அதனை இறப்பு என்று தான் உலக வழக்கிற்கொண்டு உலகினர் மனத்துயர் கொள்வர். ஆகவே அதனைக் கூறாது விடுகின்றார் சேக்கிழார். இதனாலன்றோ அவர் கதையில் முற்ற முடிய உவகைச் சுவை ததும்புகின்றதெனக் கூறினோம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 50.

நள வெண்பா

(971-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான்—நீதி
கிடத்துவான் மன்னர்தங் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து. 134

பதப்பிரிவு:—சேதி நகர்க்கு திருவை செல விட்ட அ போதில் கொடை வணிகன் போயினான் நீதி கிடத்துவான் மன்னர்தம் கீர்த்தியினை பார்மேல் நடத்துவான் வட்டை நடந்து.

அன்வயம்:—அப்போதில், கொடைவணிகன் சேதி நகர்க்கு திருவைச் செலவிட்டு (தான்), நீதி கிடத்துவான் மன்னர்தம் கீர்த்தியினைப் பார்மேல் நடத்துவான் வட்டை நடந்து போயினான்.

பதவுரை.

அப்போதில் - அப்பொழுது
கொடை - ஈகைக்குணம் பொருந்திய
வணிகன் - அவ்வணிகன்,
சேதி - சேதியென்னும் தேசத்து
நகர்க்கு - நகரத்திற்கு
திருவை - இலக்குமிபோன்ற தமயந்தியை
செல - போக
விட்டு - விட்டு (தான்),
நீதி - நீதியை
கிடத்து - நிலைநிறுத்துகின்ற
வான் - சிறந்த
மன்னர்தம் - அரசர்களுடைய
கீர்த்தியினை - கீர்த்தியை
பார்மேல் - பூமியின்மேல்
நடத்துவான் - நடத்தும் பொருட்டு
வட்டை - (தன்) வழியே
நடந்து - நடந்து
போயினான் - போனான்.

விரிவுரை:—அரசர் நீதியுடன் ஆள்வார்களானால் நாட்டின் செல்வம் மிகுந்து வணிகம் பெருகுமாதலால், நற்குணம் மிகுந்த வணிகச் செல்வர்கள் எல்லாம் அவ்வரசனது நீதிக்குச் சாக்ஷியா யிருக்கின்றனர். எனவே இவ்வகைத்தாய வணிகன் தேசம் தேசமாகப் போகின்ற காலத்தில் அங்கங்குள்ளவர், "இவ்வகைச் செல்வ வணிகன் வாழ்கின்ற நாட்டை ஆளும் அரசன் நீதியுடையவனா யிருக்கவேண்டும்" என்று அவன்தேசத்து அரசனைக் கொண்டாடுவார்கள். இப்படிப் போகுமிடமெல்லாம் தன் ஊர் வேந்தனது கீர்த்தியைப் பெருக்கிக்கொண்டு போகின்றானாகையால் இவன், "நீதிகிடத்து வான் மன்னர்தம் கீர்த்தியினைப் பார்மேல் நடத்துவான் வழிநடந்து போயினான்" என்று புகழேந்தி கூறினார். இனி, வர்த்தமானப் பத்திரிகைகள் போன்ற தற்கால சாதனங்கள் இல்லாத அந்நாட்களில் ஒருவர் மறுதேசத்தவரைப் பற்றிய செய்திகளை வர்த்தகத்திற்காக நாடு நாடாய்ச் செல்கின்ற வணிகர்போன்றவர்கள் மூலமாய்த்தான் அறியக்கூடும். இவனும் அங்கங்குச் சென்றபோது, "நான் இன்னதேசத்தின் வழியாய் வந்தேன்; அந்நாட்டு மன்னன் நீதியுடையவன்" என்றுகூறிப் போகுமிடமெல்லாம் அவர் கீர்த்தியையும் கூடவே நடத்திக்கொண்டு போதலும் கூடுமாகையால் அந்தப் பொருளும் இவ்வடிகளுக்கு ஏற்றதாகக் கொள்ளலாம்.

அற்ற துகிலு மறாதொழுகு கண்ணீரும்
உற்ற துயரு முடையளாய்—மற்றொருத்தி
நின்றாளைக் கண்டே நிலவேந்தன் பொற்றேவி
என்றார் மடவா ரெடுத்து. 135.

பதப்பிரிவு:—அற்ற துகிலும் அறாது ஒழுகு கண்ணீரும் உற்ற துயரும் உடையள் ஆய் மற்று ஒருத்தி நின்றாளை கண்டேம் நில வேந்தன் பொன் தேவி என்றார் மடவார் எடுத்து.

பதவுரை.

மடவார் - அந்நாட்டு அரசியின் பணிப்பெண்கள் சிலர் தம் தலைவியிடம் சென்று
" நில வேந்தன் - இந்நாட்டைக் காக்கும் வேந்தனது
பொன் - அழகிய
தேவி - தேவியே,
அற்ற - அறுந்த
துகிலும் - வஸ்திரமும்
அறாது - ஓயாமல்
ஒழுகு - வடிகின்ற
கண்ணீரும் - கண்ணீரும்,
உற்ற - பொருந்திய
துயரும் - வருத்தமும்
உடையளாய் - உடையவளாய்
ஒருத்தி - ஒருத்தி
நின்றாளை - நின்றவளை
கண்டேம் - 'இந்நகரில்' பார்த்தோம்
என்றார் எடுத்து - என்று எடுத்துக் கூறினார்.

விரிவுரை:—சேதிநகரத்து அரசன் மனைவி தமயந்தியின் சிற்றன்னை. அவளிடத்தில் சேரலாம் என்று சென்ற தமயந்தி அரண்மனைவாயிலை அடைந்தவுடன், எல்லாச் செல்வங்களோடும் பொன்பல்லக்கில் வரவேண்டிய தான் இந்தத் தரித்திரகோலத்தோடு சென்று தன் சிற்றன்னையின் முகத்தில் எவ்வாறு விழிப்பது என்று ஏங்கி மனம் பொறாதவளாய் வெளியிலேயே நின்று அழுதுகொண் டிருந்திருப்பாள். அரசியைச் சேர்ந்த மாதர்சிலர் அவளை அந்நிலையில் கண்ணுற்று மிகவருந்தித் தம் தலைவியிடம் சென்று சொல்லியது இச் செய்யுள்.

தெருவிலே ஒருத்தி யழுதிருந்தால் 'எமக்கென்ன' என்றிருந்தாளோ சேதிமன்னன் தேவி? துன்பத்தால் ஒருத்தி அழுகின்றாள் என்பதைக் கேட்டமாத்திரத்தில் கருணையுடைய இவள் உள்ளம் அவள்பால் ஓடுகின்றது. ஆகையால், அவளை அழைத்துவரும்படி பரிவோடு சொல்லுகின்றாள்.

போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
ஆய மயிலை யறியவே—நீயேகிக்
கொண்டுவா வென்றாடன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில். 136.

பதப்பிரிவு:—போய் அகலா முன்னம் புனை இழையாய் பூ குயிலை ஆய மயிலை அறியவே நீ ஏகி கொண்டுவா என்றாள் தன் கொவ்வை கனி திறந்து வண்டு வாழ் கூந்தல் மயில்.

அன்வயம்:—வண்டு வாழ் கூந்தல் மயில், தன் கொவ்வைக்கனி திறந்து, "புனை இழையாய், பூங்குயிலை ஆய,

மயிலை அறிய, நீ ஏகி(அவள்) போய் அகலாமுன்னம் கொண்டுவா'' என்றாள்.

பதவுரை.

வண்டு - வண்டுகள்
வாழ் - தங்குகின்ற
கூந்தல் - கூந்தலையுடைய
மயில் - மயில் போன்றவளாகிய சேதி மன்னன் [மனைவி,
தன் - தன்னுடைய
கொவ்வை - கொவ்வையின்
கனி - பழம் போன்ற வாயை
திறந்து - திறந்து,
"புனை - அலங்கரிக்கின்ற
இழையாய் - ஆபரணங்களை அணிந்தவளே,
பூ - அழகிய
குயிலை - குயில்போன்ற அவளை
ஆய - யாரென்று விசாரிக்கவும்,
மயிலை - மயில்போன்ற அவளை
அறிய - அறியவும்,
நீ - நீ
ஏகி - சென்று,
போய் - (அவள்) போய்
அகலாமுன்னம் - நீங்குவதற்குமுன்
கொண்டுவா - அழைத்துக்கொண்டு வா''
என்றாள் - என்று (தன் பணிப்பெண்ணைப்பார்த்து) சொன்னாள்,

விரிவுரை:—மயிலை, குயிலை என்றன அருமையால் கூறியவை.,

குறிப்பு:—1. குயில், மயில், கொவ்வைக் கனி, ஆகிய இவை உவமை ஆகுபெயர்கள்.

(2) தன். என்பது ஆறும் வேற்றுமைச் சொல். தன்னுடைய வாய், என்பதால் உறுப்புத்தற்கிழமைப் பொருள். அவ்வாறே கொவ்வைக்கனி என்பது கொவ்வையினுடை கனி, என்று விரியுமாகையால், கொவ்வை என்பதும் ஆறும் வேற்றுமைச்சொல். வாய் மனிதருக்கு உறுப்பாவது போல், கனியானது மரத்திற்கு உறுப்பு. ஆகையால் இதுவும் உறுப்புத்தற்கிழமைப் பொருள்.

அந்தா மரையி லவளையென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதால்—பைங்தொடியே
உள்ளவா றெல்லா முரையென்றா ளொண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு. 137.

என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக
அன்னவனைக் காணா தலமருவேன்—இந்நகர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறச் சேர்ந்து. 138.

உன்றலைவன் றன்னை யொருவகையா னடியே
தந்து விடுமளவுந் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே யிருக்க வினிதென்றா ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து. 139

கருத்து:—அம்மாதர் தமயந்தியை அழைத்துக்கொண்டுவா, அவளைக் கண்டு, திருமகள்போன்ற இவளுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வந்ததே என்று வருந்தினாள் அரசி. வருந்தி "உன் வரலாறு என்ன?" வென்று வினவ, "என் நாயகன் என்னைத் தனியான காட்டில் பிரிந்துபோக அவனைக்காணாது அலைந்து இந்த நகரத்திற்கு வந்து சேர்ந்தேன்"என்று தமயந்தி கூற, "உன் தலைவனைத் தேடித் தருகின்றவரையில் நீ இங்கேயே இரு" என்று சேதிமன்னன் மனைவி அவளை நிறுத்திக் கொண்டாள்.

ஈங்கிவளிவ் வாறிருப்ப வின்னலுழந் தேயேகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும்—யாங்குற்றார்
சென்றணர்தி யென்று செலவிட்டான் வேதியனைக்
குன்றறழ்தோள் வீமன் குறித்து. 140.

கருத்து:—இங்கே இவள் இவ்வாறு இருக்க வீமராஜன் தமயந்தியையும் நளனையும் தேடிவரும்படி தன் அரண்மனை அந்தணனை அனுப்பினான்.

ஓடும் புரவித்தேர் வெய்யோ னொளிசென்று
நாடு மிடமெல்லா நாடிப்போய்—கூடினான்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாம்
சேதித் திருநாடு சென்று. 141.

கருத்து:—அவ்வந்தணன் எங்கெங்குந் தேடிப் பிறகு சேதி நகரமும் சென்றடைந்தான்.

தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றாளை
ஆமென் றறியா வருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுதான் கொம்புமவன் செம்
அடிமேல் விழுந்தா ளழுது. [பொன் 142.

பதப்பிரிவு:—தாமம் சேர் ஓதி தமயந்தி நின்றாளை ஆம் என்று அறியா அரு மறையோன் வீமன் கொடிமேல் விழுந்து அழுதான் கொம்பும் அவன் செம்பொன் அடிமேல் விழுந்தாள் அழுது.

பதவுரை.

அரு - அருமையான
மறையோன் - வேதங்களை யுணர்ந்த அந்தணன்,
நின்றாளை - அங்கு நின்றவளை
தாமம் - மாலை
சேர் - சேர்ந்த
ஓதி - கூந்தலையுடைய
தமயந்தி ஆம் - தமயந்தி ஆவாள்
என்று - என்று
அறியா - அறிந்து,
வீமன் - வீமராஜனுடைய
கொடிமேல் - பெண்ணின்மேல்
விழுந்து - விழுந்து
அழுதான் - அழுதான்.
கொம்பும் - தமயந்தியும்
அவன் - அவனுடைய
செம்பொன் - சிவந்த பொன்போன்ற
அடிமேல் - பாதங்களின்மேல்
அழுது - அழுதுகொண்டு
விழுந்தாள் - விழுந்தாள்.

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றார் தங்கள்
உடல்போலு மொத்தா ருயிர். 143.

கருத்து:—அந்தணன் பாதத்தில் தமயந்தி விழுவதையும், அவளுக்குப் பரிந்து அந்தணன் அழுவதையும் கண்டு, அங்கிருந்தவர் ஒன்றும் வகையறியாமல் திகைத்து நின்றனர்.

மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த [லும்
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழ
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்றா ளயர்ந்து. 144.

பதவுரை.

மாரிபொரு - மேகம்போன்ற
கூந்தல் - கூந்தலையுடைய
மாதராய் - மாதே,

நீ - நீ
பயந்த - பெற்ற
காரிகைதான் - பெண்ணாகிய இவள்,
சோர் - சோர்ந்து இருக்கவேண்டிய
குழலும் - கூந்தலும்
வேணி ஆய் - சடையாகி,
வெண் - வெண்மையான
துகிலும் - ஆடையும்
பாதி ஆய் - பாதி ஆகி
வெம் - கொடிய
துயருக்கு - துயரத்திற்கு
ஆணியாய் - நிலைக்களமாய்
அயர்ந்து - சோர்ந்து
நின்றாள் - நிற்கின்றவளாகி,
பட்ட - பட்ட
துயர் - துன்பத்தை
கண்டாயோ - பார்த்தாயோ !''

என்று அந்தணன் சேதிமன்னன் தேவிக்குக் கூறினான்.

விரிவுரை :—சேதிநகரம் சென்றடைந்த தமயந்தி அங்கு அவ்வரசியின் ஆதரவின்கீழ்ச் சிலகாலம் கழித்த பின்னரே வீமராஜன் விடுத்த அந்தணன் அந்நகரிற்குப் போய்ச் சேர்ந்திருத்தல் வேண்டும். இவ்வாறு இவன் சென்று 'தமயந்தி இவள்' என்று சொல்கின்றவரையில் அவ்வரசி அவளை அறிந்துகொள்ள வில்லை. பன்னிரு வருடங்களுக்குமுன் தமயந்தியை அவளது விவாக காலத்தில் இவள் பார்த்திருப்பாள். மேலும், இப்படி அவள் தன் நகர்வந்து அழுது நிற்பாளென்று கனவிலும் எண்ணி இருக்கமாட்டாள். ஆகையால், சேதிமன்னன் மனைவி தன் தமக்கைமகள் தமயந்தியை அடையாளம் தெரிந்துகொள்ள இயலாமற் போயிருக்கலாம். தான் இன்னாள் என்பது தெரிந்தால் தன் சிற்றன்னைக்கு வருத்தம் பின்னும் அதிகமாகும் என மதித்துத் தமயந்தியும் தன்னைத் தெரிவித்துக்கொள்ளாமல் இருந்தவளாதல் வேண்டும். ஆனால், "உன் தலைவனைத் தேடித் தருகின்றவரையில் நீ இங்கேயே இரு'' என்று அவ்வரசி சொன்னபோது, யாரென்று அவனைத் தேடவிடுவது என்று எண்ணினாளோ தெரியவில்லை. பிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்ற நினைவோடு அப்படி அவள் சொல்லியிருப்பினும் இருக்கலாம்.

தன்மக ளாவ தறியாத் தடுமாறிப்
பொன்வடிவின் மேலழுது போய் வீழ்ந்தாள்-மென் [மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்புந் தண்பணைசூழ்
சேதிக்கோ னறேவி திகைத்து 145.

பொழிப்புரை:—எருமைகள் மெல்லிய மலர்களைக் கோதிக்கொண்டே போய் அவைகளில் தங்கிய அன்னப் பறவைகளை எழுப்பிவிடும் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த சேதி நாட்டரசனது மனைவி, தமயந்தி, தன்னுடைய மகள் ஆவதை அறிந்து, திகைப்புற்றுத் தடுமாறி திருமகள் போன்ற தமயந்தியின் மீது அழுதுகொண்டுபோய் விழுந்தாள்.

பொய்யாற் பொலிவது புலமை.

A Chapter from "Intentions"

By

Oscar Wilde

(974-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பன் கேட்கச் சம்மதிக்கவே விவியன் தனது வியாசத்தை நயமான குரலில் படிக்கின்றான்:—

"பொய்சொல்வ தென்பது கலையாகவும், சாத்திரமாகவும் (Science), மாந்தர் நுகர்வதற்கான இன்பமாகவும் இல்லாது போனமைதான், நமது இலக்கியங்கள் சாமான்யமான தன்மையை அடைந்ததற்கு முதலும் முக்கியமுமான காரணமாகும். நமது பண்டைச் சரித்திரகாரர்கள், நடந்த நிகழ்ச்சிகளென்று படிக்கச் சுவைக்கும் கட்டுக்கதைகளையே எழுதிவைத்தனர். இந்நாள் கதைநூல் ஆசிரியர்களோ, கட்டுக்கதை என்ற பேரால், சுவையற்றவகையில் நிச்சயமாய் நடப்பவைகளைக் கூறிச் செல்கின்றனர். அரசாங்கத்தார் வைத்திருக்கும் விஷய விவரஏடுகள்தான் (Blue Book) இந்நாள் ஆசிரியர்களுக்குக் கையாளும் முறையும் வழியுமாய் அமைந்துள்ளன. தனது நூலுக்கு விஷயங்கள் தேட, வெட்கம் சிறிதுமில்லாது, பிரிட்டிஷ் மியூஸியம் சென்று புத்தகங்களைப் புரட்ட ஆரம்பித்துவிடுகிறார்களே ! மேலும், தற்கால ஆசிரியனுக்குத் தானாகக் கற்பனைசெய்யும் புத்திதான் இல்லையென்றால், பிறர் கூறிவைத்துள்ளதை ஏற்கவும் தைரியமில்லை. ஆகவே இக்கோழை, விஷயந்தெரிய வேண்டி வாழ்க்கையைப் பற்றிச் செல்கின்றான். கண்ணால் நேரப் பாராததை எப்படி அவன் தெரிதல் கூடும்? முடிவு என்னவெனில், விஷயங்களைத் தொகுத்துவைத்திருக்கும் அகாரதிகளுக்கும் (Encyclopaedias), கண்ணால் தான் காணும் வாழ்க்கைத் தோற்றங்களுக்கும் இடையில் உழன்று, வானுயர்ந்து செல்வதற்குப் பதிலாக மண்ணைத் தழுவி, குடும்ப நிகழ்ச்சியினின்றும், வண்ணாத்தி வாழும் சிறுமையினின்றும், தனது கதைக்குப் பாத்திரமும் நிகழ்ச்சிகளும் தேடிக்கொள்கின்றான். அப்படிச் செய்வதால் அவன் தவறிப்போய், நல்ல நினைவினில் அமரும் அச்சிறு நேரத்திலும், வண்ணாத்தி வாழ்க்கையும் குடும்பச்சிறுமையும் அவனை விடாது பற்றிக்கொள்கின்றன.

இத்தகைய நோக்கத்தால் இலக்கியத்திற்கு ஏற்படும் நஷ்டம் சிறிதன்று. ஜனங்கள் சிந்தனை என்பது சிறிது மில்லாமல், 'கவிபாடப் பிறந்தவன் அவன்' என்று சொல்வது போல், 'இவன் பொய் சொல்லப் பிறந்தவன்' என்று கூறிவிடுகின்றனர். இருவிதமும் இக்கூற்றுப் பிழையுடைத்து. பொய்யும் (Lying) கவியும் (Poetry) கலையாகும். ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தம் உடையன அவை. கவிபாடப்போய்ப் பொய்புனைந்துரைத்தல் எளிதன்று. முயற்சி மிகச் செய்து அதை அறிதல் வேண்டும். சித்திரமும், சிற்பமும்போல் இப்பொய்யின்கலைக்கும்விதியும் முறையுமுண்டு. ஒருவன் பாடும் இசை யின்பத்தால் கவியென்று அவனை நாம் அறிவதுபோல், சுவைதரும் பெருமையால் ஒருவனைப் பொய்யனென்று அறியலாம். ஏதோ ஒரு சமயம் உதயமாகும் உணர்ச்சியால்மாத்திரம் ஒருவன் பொய்யனோ, புலவனோ ஆகமுடியாது. பயின்று பயின்று தேர்ந்திருத்தலே இவ்விரண்டிற்கும் வேண்டும். கண்டவனெல்லாம் கவிபாடப்புகுவது இக்கா

லத்தின் கோலமாகிக் காவியத்தின் பெருமை அழிந்தது போலவே, கையாளும் திறனிலாதவர் பொய்யுரைக்கப் புகுந்ததால் இதுவும் தனக்குரிய பெருமையை இழந்துவிட்டது.

சிறுவர் பலர், வாழ்க்கையில் புகுங்கால் இருப்பதை மிகைபடக் கூறும் இயற்கையுடையவர்களாகத்தான் இருக்கின்றனர். நல்ல பழக்கத்தாலும் கலையில்தேர்ந்த ஆன்றோர் வழிபற்றியும், செவ்வனே வளர்ந்துவந்தால் அவ்வியற்கை வியக்கத்தக்கவகை வளர்ந்து முதிரும். ஆனால் வழக்கப்படி அவர் பாதைதப்பி விழுந்துவிடுகின்றார். அவர் உண்மையை உள்ளபடி கூறுதல் என்ற மதியற்றவழக்கத்திற்குள் மெள்ளமெள்ள வழுவிக்கெடுவதேனும் ஆவார்கள், அல்லது ......

ஸிரில்:—அட, பாவி !

விவியன் :—நான் வாக்கியத்தை முடிக்குமுன் இடைப்புகுந்து தயவுசெய்து தடைசெய்யாது முழுவதும் கேள். உள்ளதை உள்ளபடி சொல்லும் வழக்கத்திற்குள் மெள்ளமெள்ள வழுவிக்கெடுவதேனும் ஆகின்றார், அல்லது அதிகம் தெரிந்தவர்கள் என்று சொல்லப்படும் கிழவர்கள் பழக்கத்தையாவது நாடுகின்றார். இருவழியும், மனோபாவப் பெருக்கத்திற்கு இடையூறாய் அமைகின்றன. உண்மையைச் சொல்லும் வளமற்ற இயற்கையைச் சிறிது காலத்தில் அச்சிறுவன் பெற்றுவிடுகின்றான். பின் காதில்விழும் விஷயங்களை, அவை உண்மைதானாவென்று ஆயத் தலைப்படுகின்றான். தன்னிலும் வயதிற் சிறியவர் சொல்லுவதை மறுக்கத் தயங்குவது கிடையாது. கடைசியாக நாவலொன்றை எழுதிவிடுகின்றான். அந்நாவல் நூலோவெனின், இப்படியுமிருக்குமோ என்று நாம் நம்பமுடியாதபடி அவ்வளவு வாழ்க்கையோடியைந்ததாயிருக்கும். இத்தகையார் நாளுக்குநாள் பெருகி வருகின்றனர். இவர்களது முறையைத் தடுக்க ஏதாவது செய்யவேண்டும். உண்மையைக் கட்டியழும் முறையைச் சிறிது மாற்றவாவதுவேண்டும். இல்லையேல் கலையும் அழகும் நமது நாட்டைவிட்டகன்றுவிடும்.

அழகும் மனோபாவ ரசமும் நிறைந்த வசனநடை வல்லான் ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸனும், இந்தத் துன்மார்க்கத்தினுட்பட்டுள்ளான். எண்ணில், கதையொன்றை உண்மையோடு பொருத்தமுள்ளதாகச் செய்ய நீ முயல்வதால் கதையின் உண்மை கழன்றோடி விடுகின்றதென்பதை நீ அறியாயோ? ஸ்டீவன்ஸன் ஆக்கிய 'பிளாக் ஆரோ' (Black Arrow) இழந்த அழகிற்குக் காரணம் அதில் இல்லாத இன்மையாலேதான் ...... இங்கிலாந்து புத்தியை இழந்துவருகிறது. நாளுக்கு நாள் இங்கிலாந்தில் பெருகிவரும் நூலாசிரியர்களுக்குச் சூரியன் கிழக்கேதான் உதிக்கின்றது. (அதாவது, இருப்பதை அப்படியே சுவையிலா வழியில் கூறுகிறார்களே தவிர, பலபட மிகைப்படுத்தியும், இல்லாதது ஒன்றைக்கற்பித்தும், படிப்பவர் மனம் களிப்புறும்படி நூலாசிரியர்களுக்குக் கூறத் தெரியவில்லை என்று ஆஸ்கார் ஒயில்ட் பரிகாசமாய்க் கூறுகின்றார்) அவர்களைப்பற்றிச் சொல்லக் கூடியது இதுதான். அவர்கள் காணும் வாழ்க்கையே நயமிலா வாழ்க்கை. கண்டதைப் பின்னும் நயமிலாது கூறிவைப்பதே அன்னார் தொழில்.

இங்கிலாந்து இப்படியிருக்கப் பிரான்ஸ் என்றாலோ, அங்கும் அப்படித்தான் இருக்கின்றது. இவ்வளவு கேவலமான ஸ்திதி அங்கு இன்னும் ஏற்படவில்லை யாயினும், அந்நாட்டில் போற்றிப் புகழவும் ஏதுவும் இல்லை. இலக்கியத்தில் அழகும், மனதைக் கவரும் தன்மையும், புதுமையும், கற்பனைச் சிற்பத்தின் சிறப்புமே யல்லவா இருக்கவேண்டும்! கீழ்வகுப்பைச் சேர்ந்தவர் செயலும், வாழ்க்கையும் நம்மைப் புண்ணாக்க வேண்டுவதில்லை. உலகத்திலில்லாது உன்கற்பனையில் பிறந்த மக்கள்தான், உண்மையான மக்கள். அவர்கள் வாழ்வுதான் உண்மையான வாழ்வு. நாவல் எழுதுபவன் தன் கதைக்கு, வாழும் ஜனங்களின் வாழ்க்கையைநாடி நாணிலாது போவானாயினும், கதையினுள் இருந்து வினைசெய்யும் பாத்திரங்கள் தனது சிருஷ்டியில் பிறந்தவர் என்று பாசாங்காவது செய்யவேண்டாவா? 'காப்பியா அடிப்பது'? பாத்திரங்களின் பொருத்தம், ஆசிரியனைத் தவிர்த்த மற்றவர்கள் இருக்கவேண்டியபடி இருக்கிறார்களா என்பதிலன்று; மற்று, ஆசிரியன் இருக்கவேண்டியபடி இருக்கின்றானா என்பதில் .... நண்பா! இந்நாள் நாவல்கள் ஒன்றாவது படிக்கத்தக்கனவல்ல வென்பதே நான் சொல்ல விரும்புவது.

ஸிரில்:—நாவல் நூல்களைக் காலதேச வர்த்தமானத்திற் கேற்றபடி அமைத்தல் கூடாதென்றா கூறுகின்றாய்?

விவியன்:—ஆம். அதுதான் நான் கூறுவது. காலதேச வர்த்தமானத்திற் கேற்றபடி அமைத்தல் என்பது சிறியதோர் பயனுக்குப் பெரியசிரமம் எடுத்துக்கொள்வதாகும். தன்னைச் சுற்றியுள்ள பொருள்களிடந்தான் மாந்தரின் மனம் நாடுகின்றது என்றும், அதனிடந்தான் இயற்கையாய் அனுதாபம் செல்லுமென்றும் ஜனங்கள் பொய்யாய் எண்ணிக் கொள்கின்றனர். ஆகவே இலக்கியங்கள் காலதேச இயற்கைக் கேற்றவாறு இருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். சனங்களது சிந்தனை தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள பொருள்களைப் பற்றியும் நிற்பதால்தான், அவர்களும் அவைகளும் இலக்கியத்தில் இடம்பெற ஏற்ற விஷயங்கள் அல்ல என்கின்றேன். நமது வாழ்க்கையொடு எவ்விதச் சம்பந்தமும் ஏதுவொன்று பெறாதிருக்கின்றதோ அதுதான் அழகுடையது. அவ்வழகுடைய வொன்றுதான் இலக்கியத்தோடியைந்தமையும். மனிதன் தன் சுகதுக்கத்திற்குக் காரணமாயிருப்பதும், அவனது வாழ்க்கைக்குரிய அவசியப்பொருளாய் அமைவதும் எதுவோ, அப்பொருளுக்கும் அழகெனுங் கலைக்கு மிடையே இருப்பது வெகுதூரம். காவியமொன்றில் விவகரிக்கும் பாத்திரத்திற்கும் நமக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இருத்தல்கூடாது. சார்லஸ் டிக்கன்ஸ், சிறந்த ஆசிரியர்தான். காலக்கொடுமையினால் அவர் பட்டதும், அவரது நூலின்சிறப்பும் கெட்டது. வழக்கெடுத்து நியாயஸ்தலத்தின் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகும்பேதை மக்களிடம், படிப்பவர் அனுதாபத்தைச் செலுத்தநினைத்துச் செய்த அவர் முயற்சியெல்லாம் வீணாயிற்று. நூலின் சுவையும் சிதைந்தது. காலம், தேசம் இயற்கை என்ற பேரால் சிறந்த கலைவல்லார் பலர், அரசியல் கட்சிவாதிகளும் பத்திரிகைக்காரர்களும் கையாளும் முறையைச் சுமந்துகலைநிலைகவிழ்ந்து விழுவதுவருந்துதற்குரிய காட்சியேயாகும். குயிலொலிக்க மயிலாடும் குன்றத்திடைக் கோயில் கொண்டிருக்கும் அப்பாலோ தேவனுடன் உறவாடி அமையாது, பட்டினத் தெருக்களிலே, பறந்தடிக்கும் புழுதியிலே, சிறுமைமிகு சேரியிலே நாட்களை நாம் நண்பா, கழித்துவருகின்றோம். என்னே, நாம் வீழ்ந்த வீழ்ச்சி! அழகிலே வாழ்வதற்கு நமக்குள்ள பிறப்புரிமையை உண்மையெனும் சிறுமைக்கு விற்றுவிட்டு நிற்கின்றோம் இக்காலம். நாம் பிறந்ததும் இதற்குத்தானா? என்னே நமது பேதைமை!

ஸிரில்:—நண்பா! நீ சொல்வதில் உண்மையுண்டென்றே இப்பொழுது கருதுகின்றேன். தற்காலம்வெளிவரும் நாவல்களும் மற்றவையும் படிக்கும்போது, படிப்பவர்க்குச் சிறிது இன்பம் தருமேனும், பின்னுமெடுத்து இரண்டாம் முறை படிக்கத் தக்கனவாய் அவை இல்லை.

ஒருமுறை படித்தானதும் குப்பைக்கூடையே அதனிடமாகின்றது. மறுமுறை படிக்கவேண்டுமெனும் அவாவைத் தாராததற்குக் காரணமும் அவைகளிடம் கலைச்சுவையிலாமையேதான். இது இலக்கியம், இது அன்று என்று நிர்ணயிக்கப் போதிய சான்றும் நூலிலேயே உளது. திரும்பவும்திரும்பவும் படிக்கும்படி தூண்டும் நூலே இலக்கியம். அத்தூண்டுதலைத் தாராதது இலக்கியமல்லாதது. மீண்டும் மீண்டும் படித்து அனுபவிப்பதற்கு ஏற்றதல்லாத வொன்றைப் படிப்பதிற் பயனில்லை. நிற்க, நானொன்று உன்னைக் கேட்க விரும்புகின்றேன். இப்பொழுது 'நமது நூல்கள் உற்ற நோய்க்கெல்லாம் மருந்து, இயற்கையின்பால், எளிய வாழ்க்கையின்பால் மீண்டு செல்லல்' என்று பலர் கூறுகின்றனரே. அதைப் பற்றி உனது அபிப்பிராய மென்ன? கூறுவாயோ.

விவியன்:—அதைப் பற்றியும் எனது வியாசத்தில் சில வார்த்தைகள் சொல்லியுள்ளேன். நீ இப்பொழுதே கேட்பதால் அப்பாகத்தை முதலில் உனக்காகப் படிக்கின்றேன். கருத்துடன் கவனமாய்க் கேள்.

“இந்நாள் மாந்தர் பலர் 'எளிய வாழ்க்கையின்பாற் செல்வோம். இயற்கையைத் தழுவி அமைவோம்' என்று வாய்விடாது கூறிவருகின்றனர். அவர் சொல்வதும் இது. “இயற்கையையும், எளிய வாழ்க்கையையும் நாடிப் புகுவோம். புகுந்தால் அவை, நமக்கெனப் புதியது புனைந்த கலையைத் தரும். கலையரசியின் நரம்பில் புதுக்குருதி ஓடிப் பரவும். அவளுக்கு வன்மையும், முன்னேற்றமும் ஏற்படும்.” இவ்வணம் கூறுகின்றனர். பாவம்! அவர்கள் முயற்சி நன்னோக்கங் கொண்டதே. ஆனால் அதில் பிழையுளது. இயற்கையோ எப்பொழுதும் கால இயலுக்குப் பின்னே நிற்கின்றது. எளிய வாழ்க்கையோ எனின் கலையை அழித்துவிடும். கலைக்கு விரோதி வாழ்க்கைதான்.

ஸிரில்:—என்ன! இயற்கை, காலத்திற்குப் பின்னே நிற்கின்றது என்கிறாயோ? உண்மையாகத்தான் கூறுகின்றனையா! அல்லது விளையாட்டு மொழியா இது?

விவியன்:—உண்மைதான், பொருள் மறைந்துள்ள வகையில் கூறிவிட்டேன். எனது கருத்தை விளக்குவேன். இயற்கை என்றால் என்ன? அது சாதாரணமான இயற்கையின் எளியஉள்ளுணர்வு (Natural simple Instinct) எனப்பொருள்படுமாயின், அது நாம் 'பயிற்சிபெற்றுளோம்' என்னும் ஞாபகத்துடன் கூடிய மனதிற்கு (Self - conscious Culture) மாறுபட்டது. முன்னதின் வழிபற்றிய நூல்கள் காலத்திற்கு ஏற்றதாயும் 'இது பழையது' என்று தள்ளுவதற்குரியதாயுந்தானிருக்கும். அவை படிப்பதற் கேற்றனவாகா. இயற்கைவியாதி ஒருநூலை ஒருமுறை பற்றினாலே உலக தத்துவம் போய்விடும். இரண்டாமுறையாகப் பற்றிவிட்டால் சொல்லத் தேவையில்லை. கலையே அழிந்தது, காவியமே போயிற்று. இயற்கை, மனிதனுக்கு வெளியேயுள்ள ஒன்றென்பது நமதுகருத்தாயின், பின்னர்நாம் இயற்கையின்பால் காண்பதெல்லாம், அதற்கு வெளியிலிருந்துநாம், கையோடுகொண்டுபோய்வைக்கும் வாய்மையைத்தான் காணலாகும். பின்னர் இயற்கை, புதுமையை இழந்துவிடுகின்றது. இயற்கைக் கவி என்று நம்மவர் கொண்டாடும் வொர்ட்ஸ் வொர்த் ஏரிகளைச் சுற்றிவந்ததுண்டு. பயன்தான் என்! ஏரியில் அவர்கண்டதுதான் என்ன? ஏரிக்குப் போனாரே யொழிய அவர் ஏரியின்அழகறிந்த கவியல்லர். ஏரிக்கு எல்லையாய் அமைந்திருந்த கற்பாறைகளில் ஓதினார் வேதத்தை. அந்தவேதம் ஏரி தந்த சாச்வத வேதமன்று. கற்களுக்குள் அவரே ஒளித்துவைத்திருந்த செய்தியே யாகும். ஆனால், அவர் செய்த நூல்களுக்குச் சிறப்புச்சிறிது ஏற்பட்டதும் அவர் இயற்கை யாத்திரையால் அல்ல. அவர் கவிதைச் செல்வியை நாடிய பொழுதுதான்......... (“வொர்ட்ஸ் வொர்த் செய்த நூல்களில் ஸானெட்ஸ் என்று சொல்லப்படும் சிறு பாக்கள்தான் இயற்கையின் துணையைத் தேடாது உள்ளத்தினின்று தானாக கவிச்சுவையுடன் வந்தன)

ஸிரில்:— நண்பா நீசொன்னது முழுவதையும்! நான் ஏற்க முடியாதவனாக விருக்கிறேன். அழகியசோலையினுள் ஒருவன் இருக்குங்கால் அவனிடமிருந்து எழும் உணர்வு கலையுணர்வாகத்தான் இருக்குமென்பது எனது அபிப்பிராயம். கலையுணர்வு ஏற்படவில்லையாயின், இயற்கைபால் இயங்கும் கலையை ஏற்கும் தன்மையில் இருக்கிறது உயர்வும் தாழ்வும். ஆதலின், குற்றமும் குறையும் இயற்கையினிடத்திலில்லை. இருப்பது மனிதன்மாட்டே. பிரகிருதியினிடத்தில் சென்றடைவதென்றால் மனிதன் தன்னின் உயர்ந்தவோர் ஆன்மாவை அணுகிச் சேர்வதேயாதல் வேண்டும். இக்கருத்தை நீ மேற்கொள்வாய் என்றெண்ணுகின்றேன். நல்லது. உன் கட்டுரையைப் படி, பார்ப்போம்.

K. இராஜகோபாலன்.

வானசாஸ்திரம்.

(969-வது பக்கத் தொடர்ச்சி)

நக்ஷத்திரங்கள்.

நக்ஷத்திரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ததில்—நமது கண்ணுக்குத் தோன்றும் நக்ஷத்திரங்களும் தூரதிருஷ்டியின் மூலமாகத் தெரிகின்ற லக்ஷக்கணக்கான நக்ஷத்திரங்களும் ஒருகூட்டத்துக்குச் சேர்ந்தவைஆகும் என்பது வானசாஸ்திரிகள் துணிபு. இவைகளுள் அனேகம் மிகப் பெரிய பரிமாணம் உள்ளவைகள் என்றும், சூரியன் மத்திபமான பரிமாணமுள்ள ஒருநக்ஷத்திரம்என்றும்சொன்னோம். இது மாத்திரமன்று. நக்ஷத்திரங்களில் அனேகம் வெறுங்கண்ணுக்குத் தனி நக்ஷத்திரம்போலத் தோன்றினாலும், தூரதிருஷ்டியின் உதவியைக்கொண்டு பார்க்கும்போது அவைகள், இரண்டு அல்லது நாலு அண்டங்கள் சேர்ந்திருப்பது தெரியவரும். இவ்விதமான இரட்டை நக்ஷத்திரங்கள் சாதாரணம் என்பது தற்கால வானசாஸ்திரஆராய்ச்சியின் முடிபு. இவ்விதம் இரட்டையாய் அல்லது நாலு சேர்ந்திருக்கும் அண்டங்கள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய ஒரேஅளவு உள்ளவைகள் என்றும் அவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்று அதிக தூரத்திலிருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு வேண்டியஆதாரங்கள் அனேகம் உள. ஆனால் இரட்டை நக்ஷத்திரங்களில் சேர்ந்துள்ள அண்டங்கள் சில ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டிருக்கலா மென்பது கூடும். இவைகள் வீசும் ஒளியை அளவெடுத்துப் பார்த்ததில் சில சமஒளி உள்ளவைகளாயும், சில ஒரு அண்டத்தைப்பார்க்கிலும் மற்றது ஒளி குறைந்ததாயும், இன்னும் சிலவற்றில் ஒன்று ஒளி அற்றதாயும் இருப்பதாகத் தெரிகின்றன. இவைகள் ஒன்றை ஒன்று சுற்றிவருகையில் ஒன்றை ஒன்று மறைப்பதும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று வரிசையாய் இருப்பதும் சாதாரணமான சம்பவம். இந்தச் சமயங்களில் ஒளியறி கருவியினால் இவைகளைப் பரிசோதனை

பண்ணி, இவைகள் தனித்தனி வீசும் ஒளியின் அளவு, இவைகளின் பரிமாணம், இவைகளின் சுற்ருேட்ட காலம், முதலியவைகள் எல்லாம் கணிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகாய வெளியில் நக்ஷத்திரக் கூட்டங்களுக்கிடையே சில சமயங்களில் புது நக்ஷத்திரங்கள் தோன்றி மறைகின்றனவென்று சொன்னேம். இவ்விதம் நக்ஷத்திரங்கள் தோன்றி மறைவது மிக அபூர்வமான சம்பவமன்று. நக்ஷத்திரங்கள் தொகையையும் அவைகள் சிருஷ்டியில் தோன்றிய கால அளவையும் எண்ணும்பொழுது நமது கால அளவையில் அனேக வருஷங்களுக்கு ஒருமுறை ஒன்று தோன்றினும் இவை சாதாரண சம்பவம் என்றே சொல்லவேண்டும். புதிதாய்த்தோன்றும் நக்ஷத்திரங்களில் சில சிறிதுகாலம் மிகப் பிரிபையுள்ளவாய் மாறிப் பின் மிகக் குறைந்த ஒளி அளவு உள்ளவைகளாய் மாறிப் போகின்றன. இவ்விதம் சடுதியில் சுவாலிக்கும் நக்ஷத்திரங்கள் வருஷத்துக்கு ஒன்பது பத்தாவது அளவை எட்டுகின்றன வென்று ஒருபெரிய வானசாஸ்திரி கணக்கிட்டிருக்கிருர். இதிலிருந்து இது எவ்வளவு சாதாரணமான சம்பவம் என்பது தெரியவரும். மாறுதலற்றது அன்று நக்ஷத்திர சிருஷ்டி என்பது இதிலிருந்து தெரியலாம். நமக்கு ஒளி வேறுபாடாகத் தோற்றப்படும் மாற்றம் மிகப்பெரிய அண்டமுடிவையோ வேறு மனதுக்கு எட்டாத ஒரு அழிவையோ குறிக்க வேண்டும். நக்ஷத்திரங்களில் அனேகம் இவ்வித மாறுதல்அடைகின்றனவென்றும், அதிகமாய்ச் சூரியனை ஒத்த நக்ஷத்திரங்களே இப்புதிய நிலை அடைகின்றன வென்பதும் சிலர் துணிபு. இது உண்மையாளுல் நமது சூரியனும் ஒருகாலத்தில் இவ்விதமான பெரிய மாறுதல் அடையக்கூடும். அப்போது சூரியனுடைய நிலை என்னவாயிருக்கக்கூடும் என்பதும் சூரியனைச் சுற்றிவரும் கிரகங்கள் நிலை என்னவாயிருக்கக் கூடும் என்பதும் யூகித்துக்கொள்ள வேண்டியதே.

ஆகாய வெளியில் நக்ஷத்திரங்கள் சில ஒன்று சேர்ந்து கொத்துக்கள்போல இருக்கின்றனவென்று சொன்னேம். இவ்வித நக்ஷத்திரக்கூட்டங்கள் இரண்டுவகையானவை. ஒன்று நமது நக்ஷத்திரத் தொகுதிக்குச் சேர்ந்தவை. மற்ற வகுப்பு அப்பாலுக்கப்பாலாய் நின்று வேறு நக்ஷத்திரத்தொகுதிகளாய் இருக்க வேண்டுமென்று வானசாஸ்திரிகளால் எண்ணப்படுவன. இக்கூட்டங்களுக்குச் சேர்ந்த நக்ஷத்திரங்களெல்லாம் ஒரே சலனம் உடையன. அவைகளுக்கிடையில் தனித்தனியான அசைவு இருந்தாலும் அவைகள் எல்லாம் சேர்ந்து ஒரே வேகமாய் ஆகாய வெளியில் சென்றுகொண்டிருக்கின்றன. முதல் வகுப்புக்குச் சேர்ந்த நக்ஷத்திரக்கூட்டங்கள் அனேகம் உள. கார்த்திகை நக்ஷத்திரமென்று சொல்லப்படும் ஆறு நக்ஷத்திரங்களையும் தூரதிருஷ்டி மூலமாகப் பார்த்தால் அவைகள் ஆறு நக்ஷத்திரமல்லாமல் அனேக நூறு நக்ஷத்திரங்கள் ஒன்ருய்ச் சேர்ந்த கூட்டம் என்பது நன்கு புலப்படும்.

இரண்டாவது வகுப்புக்குச்சேர்ந்த கூட்டங்கள்வெறுங் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சில உற்றுக் கவனித்துப் பார்த்தால் மிகவும் மங்கலான ஒருசிறு வெண்முகில் போலத் தோன்றும். தூரதிருஷ்டியிற் பார்த்தால் அனேகமாயிர நக்ஷத்திரங்கள் சேர்ந்த கூட்டங்களாகத் தெரியும். தூரதிருஷ்டியில் பார்ப்பதோடு இவைகளைப் புகைப்படம் எடுத்துப் பார்த்ததில் இவைகளைச் சேர்ந்த நக்ஷத்திரங்களின் தொகை அனேக மாயிரம். ஒரு கூட்டத்தில் 30000 நக்ஷத்திரங்களை எண்ணியிருக்கிருர்கள். இதுதான் அக்கூட்டத்துக்குச் சேர்ந்த நக்ஷத்திரங்களின் தொகை என்று சொல்லமுடியாது. நமது கருவிகளுக்கு எட்டாத எத்தனையோ ஆயிரம் நக்ஷத்திரங்கள் இருக்க வேண்டும். இந்தக் கூட்டங்கள் நமது நக்ஷத்திரத்தொகுதிக்கு 20000 த்துக்கும் 200000 ஒளி வருஷங்களுக்குமிடையிலுள்ள தூரத்துக்கப்பால் இருக்க வேண்டுமென்று ஒரு வானசாஸ்திரி கணக்கிட்டிருக்கிருர். இந்த நக்ஷத்திரக் கூட்டங்களிலிருந்து நமது நக்ஷத்திரக் கூட்டத்தைப் பார்க்கவேண்டுமாளுல் மிகப்பெரிய தூரதிருஷ்டி வேண்டியிருக்கும். அவ்விதம் பார்த்தபோதிலும் வெகுசில நக்ஷத்திரங்கள்தான் தெரியும்.

இதுவரையும் குறிக்கப்பட்ட சூரியன் சந்திரன் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் நக்ஷத்திரக் கூட்டங்கள் ஆகிய இவைகளைத் தவிர இன்ஞெருவகைச் சோதிகளிருக்கின்றன. இதற்கு ஆங்கிலத்தில் 'நெபுலே' (Nebulae) என்று பெயர். இவைகள் பார்வைக்கு வெண் முகில் போன்ற தன்மையிலும் தோற்றத்திலும் வெவ்வேறு வகைப்படுவன. இவைகளை நாம் தூமதாரைகள் என்று குறிப்போம். இவைகளிற் சில பரந்து ஒழுங்கான உருவமில்லாதவைகளா யிருக்கின்றன. இவைகளோடு ஒத்த இன்ஞெருவகை தூமதாரைகள் இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒளி வீசும் நக்ஷத்திரமொன்று சுவாலித்துக் கொண்டிருக்கிறது. இந்த நக்ஷத்திரங்களின் ஒளியே இவைகளையும் ஒளிகாலச் செய்கின்றன வென்று சொல்லுகிருர்கள். இவ்விதமான 'நெபுலே' 78 இதுவரையும் எண்ணியிருக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதம் ஒளி வீசும் தூமதாரைகளைத் தவிர ஒளியற்று இருண்ட தூமதாரைகள் அனேகம் அந்தர வெளியில் இருக்கவேண்டுமென்னும் கொள்கை இப்போது முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறது. இதற்கு வேண்டிய ஆதாரங்களுமுள. இவ்விருண்ட தூமதாரைகள், ஒளி வீசும் நக்ஷத்திரம் ஒன்று அவற்றின் பக்கத்திலிருக்குமாயின், அவைகளும் ஒளிகாலும் என்பது ஒரு வானசாஸ்திரியின் அபிப்பிராயம். எவ்விதமானபோதிலும் அந்தர வெளியில் ஒளியுடையவையும் அற்றவுமான தூமதாரைகள் பரவியிருக்கின்றன வென்பது சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதுவரையும் கூறப்பட்டவைகள் எல்லாம் நமது நக்ஷத்திரத் தொகுதிக்குள் இருப்பவை என்று கூறலாம். இதற்கு அப்பாலாய் நிற்கும் ஒருவகைத் தூமதாரைகள் இருக்கின்றன.

இவைகள் தன்மையிலும் உருவத்திலும் மேற்சொல்லப்பட்டவைகளிலிருந்து மிகவும் வித்தியாசமுள்ளவை. இவைகள் உருவத்தில் சுழல் போன்றவையாயும் அல்லது உருண்டை வடிவமானவையாயும் அல்லது கதிர் வடிவுடையவாயும் காணப்படுகின்றன. இவைகள் காலகதியில் உருண்டை வடிவமானவை, கதிர்வடிவமானவையாய் மாறி. இவ்விதம் கதிர் வடிவமானவை திரும்பவும் சுழல் வடிவமானவையாய் மாறிவர வேண்டுமென்பது துணிபு. இம்மாற்றங்கள் உண்டாவதற்கு எத்தனையோ யுகங்கள் செல்லவேண்டும். சுழல் 'நெபுலே' க்களைப் பரிசோதனை செய்ததில் இவைகள் சிப்பியைப்போன்று பரந்து நடுவில் தடித்த உருவம் உள்ளவைகளாயும் ஒன்றிற்குள் ஒன்று சுருண்டிருக்கும் இரண்டு நீண்ட கிளைகள் உள்ளவையாகவும் தோற்றப்படுகின்றன. இக்கிளைகள் இத் தூமதாரைகளின் சுழற்சி வேகத்தின் காரணமாகஇவைகளிலிருந்து வளர்ந்து நீண்டுஅவ்வேகத்தின் காரணமாகவே மறுபடியும் அவைகளைச் சுற்றிப் புரிபோல் சுருண்டு வருகின்றன. இவ்விதமான கிளைகள்

புதிது புதிதாய்த் தோன்றிச் சுற்றிக்கொண்டே வருகின்றன. புதிய கிளைகள் உற்பத்தியாகி நீண்டு வளர்ந்து சுருள்வதற்கு எத்தனையோ ஆயிரவருஷ காலம் செல்லுமென்ருலும் நக்ஷத்திரங்களின் காலங்களை எண்ணும் பொழுது இவை வெகு விரைவிலே நடை பெறும் சம்பவங்களா யிருக்கின்றன.

இந்தத் தூமதாரைகளின் பரிமாணத்தையும் அவைகளுடைய தூரங்களையும் அவைகளில் அடங்கியிருக்கும் பொருளின் அளவையும் கவனிக்கப் புகுந்தால் அவை கணக்குக் கெட்டாதவையா யிருக்கின்றன சுழல் தூமதாரைகள் 700000-ம் வரையிலிருப்பதாகவும், இவைகளுட் சில 10 லக்ஷ ஒளி வருஷங்களுக்கப்பாலிருக்கின்றனவென்றும், இவைகளிலடங்கி யிருக்கும் பொருள் எத்தனையோ லக்ஷம் நக்ஷத்திரங்கள் உண்டாவதற்குப் போதுமான தென்றும் கணக்கிட்டிருக்கிருர்கள். இவைகள் சுழன்றுகொண்டிருக்கும் வேகம் ஒரு மணி நேரத்துக்கு 300000 மைல் வீதம் என்று கூறுகிருர்கள். இவைகள் குறிக்கும் மாற்றத்தைப் பின்ஞல் கூறுவோம்.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(973-வது பக்கத் தொடர்ச்சி)

39. தம்பியும் எம்பிரானும்.

தன்னிளந் தலைவற்காக அவனுடைக் குன்றிற்காக, முன்னவர் புகழிற்காக முதுக்குடி மாபிற்காக, சொன்ன சொல் காத்தற்காகச் சுயநலங் கருதாதேகி அன்பினிற் சிறந்த சிந்தைத் தினகரன் வந்து நிற்கக் கம்மியன் அவனைக் கண்டு வியந்தனன். வியந்து "நீயுன் நம்பியைக் காக்கவேண்டி நயந்தனை போலும். மற்றக் கம்பம் போல் நிற்கு மந்தக் கந்தனே என்பால் வந்து தன்தலை தானே காத்தல் தக்கவோர் செய்கை யாகும்" என்றனன். குன்றவர் ஏறுபோல்வான் தினகரன் இதனைக் கேட்டு, "நன்று நீ நவின்ருய். உன்போல் விலைக்கொரு வாளை ஏந்திப் புன்ருெழிற் செய்வே னல்லேன், விதிமுறைப் போரே பூண்டு நின்றனென். பெருஞ்சோறுண்ட கடமையை நினைப்போம் கண்டாய்," என மறுத்துக்கூற இருவருக்கும் போர் தொடங்கியது. உருவத்தால், உரத்தால் தன்னுடைய தலைவன்பால் இரக்கத்தால், எதிர்த்தனன் தினகரன். கலாநாதன், பருவத்தால் திறத்தால் வான்சுழற்றும் வேகத்தால் தன்னருங் காந்தியின்பால் காதலால்பொருதனன். கரியும் புலியும் உடன்ருலென்னக் கை கலந்தனர். இவ்விருவர் இட்டபோரின் முடிவிலேயே இருதிறத்து வெற்றியும் தோல்வியும் தெரிந்துவிடுமென உணர்ந்தார்போல் பொருநர் பிறர் தத்தம் தொழில் நிறுத்தி அவ்வயின் எய்திச் சூழ்ந்து நின்றனர். வென்றபின் இக்கலாநாதனுக்கு எவ்வகைக் கைம்மாறு அளிப்பதென வியந்துநின்றனன் காலமாருதர் தலைவன். தினகரனும் வெல்லானேல் தன் கதி என்ஞவதென ஏங்கி நின்ருன் வஜ்ரதரர் தலைவன் மகேந்திரன். இதுகாறும் வீற்றிருந்த அரசனும் இப்பொழுது எழுந்து நின்ருன். மருண்டு மருண்டு நண்ணுவர் எவரென நாற்புறமும் பார்த்திருந்த விராடனும் இக்கடும்போரைக் கண்ணகலாமல் நோக்குவாஞயினுன். மறமென நொந்தாரேனும் மடாதிபதியும் பார்வையை அகற்றவில்லை.

குந்தமும் வாளும் தினகரன் ஓங்குந்தோறும், "உய்ந்தனென் உய்ந்தனென்" என்று உன்னினன் கந்தன். மற்றதனைத் துண்ணென வீரக்கம்மியன் விலக்குங்கால் விதிர்க்கலாஞன். தன்னின் உயரம் மிக்க தினகரன் உரத்தை எய்திக் கட்கத்தால் குத்துதற்குக் கலாநாதனுல் எளிதில் இயலவில்லை. முன் இந்நிலையில் காளிகோட்டத்திற்கெதிரே ஏழைத் தனஞ்சயன் பழியைத் தீர்க்க இவன் சவகரிச்சடங்கிற் கொவ்வாப் படுகொலைப் பாதகன் மகோதரனை அடர்த்தபோது செய்தவொரு சூழ்ச்சியை இவ்விடத்தும் கையாளலாமென வெண்ணி எய்த்தவன்போல் மாயஞ் செய்தான். ஆஞல், அது தினகரன்பால் செல்லவில்லை. ஈட்டியை ஒருகை யூன்றி மறுகையே ஓங்கிஞன் தினகரன். இதுகண்ட கலாநாதன் வியப்பெய்தி, "நண்ப, போரும் சிறிது வல்லை நீ" எனப் புகழ்ந்த வாங்கே துள்ளி யகன்று நிற்கத் "தினகரன், "ஐய, நின்னையான் வெல்வதரிது. யான் தோற்றேனுனும் நல்லவோர் பகைவனுக்கே தோற்றேனென்று உவக்கும் என் உள்ளம்" என்ன எதிர்மொழி இயம்பலோடும் வெம்போர் முன்போல் இருவரும் முயன்று செய்தனர். இதற்கிடையில் மகேந்திரன் மெல்லமெல்லத் தன் கவசமும் கேடகமும் கழற்றிவிட்டுப் போர்க்கோலத்தைக் களைவதை யாரும் கருதவில்லை. அவன் இவைகளை யெல்லாம் அகற்றி நீக்கியபின் அடிமேல்அடியாகப் பின்செல்ல லாஞன். போரிலே இறை பிறழ்ந்தால் தன்னுயிர் இறுப்பது திண்ணமென ஓர்ந்தவனேனும் தினகரன் சிறிது நேரத்திற்கு ஒருதரம் தனதரும் 'மகேந்திரனிற்குத் தீதொன்றும் இல்லையே இல்லையே'என்று அவனைப் பார்த்திருந்தவன் இப்பொழுது திரும்பிப்பார்க்க அவன் இருந்தஇடத்தில் இல்லாதது கண்டு திகைக்கவே, கம்மியன் அவன் கழுத்தை நோக்கி ஏவிய குத்தை தடுக்காது அயர்ந்தனன். அவ்வளவில் பீறிய இரத்தம் பாய, "மைந்தாவோ, மாள்கின்றேன்! ஈண்டென்பால் வாராயோ!" எனப்புலம்பினஞகி எறிவேல் உண்ட களிறுபோல் பிளிறி வீழ்ந்தான். காலமாருதர் திறந்து வாத்தியங்கள் வெற்றி முழங்கின. சூழ்ந்திருந்த சனங்களெல்லாம் கட்டுக்கடங்காமல் சமர்க்களத்துள் புக்கோடி வந்து ஆரவாரஞ் செய்தனர். வெலற்கரும் பகையைவென்ற கலாநாதனே கந்தனைத் தேடி நோக்க அவன் ஆற்றினதருகு ஓடக் கண்டான். கண்டவுடன் அவ்வயின் விரைந்தேக, இடைப்புகுந்த நகரமாக்களிற் சிலர் அவனை நிறுத்திப் பாராட்டினர். கந்தனைக்கருதியிவன் விரைந்தனன் என்பதையுணர்ந்த சிலர் அவனைத் தடுத்து "ஏ, கலாநாதா, மலையெனத் தகைய இவ்வீரனை வென்ற வீர! அச்சிறுவ னுனக்கொரு பொருளோ! கந்தனேடு உனக்கு என்னை பகை!" என்று வழி மறித்தனர். இன்னவாறு இடையூறு செய்வோரை இருபுறத்தும் உதறித்தள்ளி அவர் பிடியினின்று விடுவித்துக்கொண்டு கலாநாதன் போவதற்குள், ஓடிப்போந்த கந்தன் ஆற்றினுள் குதித்து நெடுந்தூரம் நீந்திவிட்டான். கண்டான் இதனைக் கலாநாதன். கவசமும் கேடகமும் கைவாளும் விட்டெறிந்தான். ஓடிப்போய்த் தானும் அவ்வாற்றில் பாய்ந்து நீந்திக் கந்தனைத் தொடரலாயிஞன். கந்தன் நன்கு நீந்திஞன். மேலும் அவன் கைகள் போர் செய்து களைத்திருக்கவில்லை. ஆதலால் அவனுக்கும்அவனைத்தொடர்ந்த கூற்றுவனுக்கும் இடை

யிருந்த தூரம் குறுகவில்லை. கரைப்புறங் குழுமிய மாந்தர் அவ்விருவரையும் தம் கண் மறைகின்ற வரையில் கூக்குரலிட்டழைத்தும் வாராமையால் விதனத்தோடு திரும்பினர். கந்தனால் இயலுமாயின், தான் வளர்ந்த அந்நன்னகர் மாக்களை தஞ்சமென வந்தடைந்திருப்பான். மற்றிக் கலாநாதனைக் கடந்து கரைசேருதல் எங்ஙனம்!

எவ்வாறு முடியுமோ இப்போர் என்று நெடுங்காலம் ஏங்கியிருந்த காலமாருதர் தலைவன், வெற்றி இன்று தனதாயிற்று என்னும் உவகையோடு அரசன்முன் எய்தி, "மன்னா, நின்னருள் பெற்று எம்மிடம் மீள வந்துளேன். பெருங்குன்றம் முழுவதும் எனதாயிற்று. அதனை உன் ஆணை கடவாமல் காக்கின்றேன். விடை தருதி" எனப் பணிந்தனன். வேந்தன் விராடன் முகம் நோக்கினான். குன்றத்தலைவர் இருவரும் ஒருங்கே ஒழிவது அவன் சிந்தைக்கு ஏற்றதாகையால் அம்மாமாயன் காலமாருதர் தலைவனை உறுத்து நோக்கிக் "குன்றவர் தலைவ, இழந்த போரில் முதுகு கொடுத்தோடும் மாற்றானைக் கொல்லுதற்கு உன் சேவகன் தொடர்ந்துளான். அது தக்கதன்று. வஜ்ரதரனது உயிர் உனது ஆளினால் போமாயின் அதனிற்கு நீ உன்றன் உயிர்கொண்டே ஈடு செய்யவேண்டும். ஆதலின் அதன்முடிவு தெரிகின்றவரையில் உன்னைக் காவலில் வைத்திருக்கவேண்டியது எங்கள் கடன்" என்று இயம்பித் தன் போர்ச்சேவகரை அழைத்து அவனைச் சிறைக்கூடம் கொண்டுபோமாறு விதித்தான். தன்னைப் பற்றவந்த படைஞரைக் காலமாருதன் கனன்றுதறி "நிருப, நீதியோ விது? போர்முறை பிறழாது போற்றும் கொள்கையேம் குன்றினில் வாழும் கானவர் யாங்கள். பொருதுடைந்த பகைவன்றன் முதுகினிற் பழுதுறப் பாயா எம் கைவேல். பின்னிடைந்தோடிய அவ் வச்சிரதர சிறுவனைக்கொலைகொண்டு தொடர்வோனும்என்படைக் குன்றத்தவனல்லன். நும் நகர நாகரிகமே இவ்விழி செயல் புரிகின்றது. இன்னவாறு தொடர்ந்தவன் என் படையைச் சேர்ந்தவீரனாயின் அவனை என் வில்லம்பு தொடர்ந்து வீழ்த்தியிருக்கும். கம்மியக் கயவரெல்லாம் உலைப்புகை உயிர்ப்பதல்லால் பெருந்தகை அரசர்க்குரிய படைத்தொழில் ஏற்பாரேல் போரறம் பிழையாதென் செய்யும்! ஆதலால், இப்பழி என்னைச் சார்ந்திடாது. இறைவா, என்னைச் செலவிடு" என்று கழறினான். இது கேட்ட விராடன், "எம்நகர நாகரிகம் இருந்தவாறிருக்கட்டும். கயவனென்று நீ இன்று நன்றியின்றி ஏசும் அக்கம்மியன் முயன்று தந்த வென்றிக்குமாத்திரம் உரிமை வேண்டும் நீ, அவன் இழைக்கும் பழிக்கும் பாத்திரமாகாது ஏகுதல் இயலுமோ! உன்திறம் உனது ஆளாய்ப் பொருதவன் அவன். அவன்செய்கை உன் செயலே. அவன் போர்முறை பிழைத்தால் நீயும் உயிர் பிழையாய், அறிதி. படைஞனன்றிக் கொலைஞனுமாகிய கம்மியனையும் யாம் சும்மாவிடோம்—அது பின்னர்" என்று சேவகர்களைப் பார்த்து, "ஏன், வாளா இருக்கின்றீர். இழுத்துச்சென்று இவனைக் காவலில் வைத்திடுவீர்," என எடுத்துக் கூறினான்.

நெடுநாட்களாகத் தான் மனதிலே கட்டிவந்த கோபுரத்திற்குக் கும்பமும் இன்றுவைத்து முடித்துவிடுவதாக விராடபத்திரன் எண்ணி மிகுந்த ஊக்கமுடையவனாயினான். 'இளவரசன் இறந்தகன்றான். கந்தனை நீரிலே முழுக்கிக் கலாநாதன் கொல்வது நிச்சயம். அதனை வியமாக வைத்துக்கொண்டு காலமாருதன் தலையையும் சட்டப்படி துமித்துவிடலாம். பின்னால் தான் ஆளவிருக்கும் ஆட்சிக்கோர் இடையூறு விளைக்காவண்ணம் குன்றத்தலைவர் இருவரும்இவ்வாறு தொலைந்தனர். கம்மியன் கலாநாதன் அற்பப் பொருளேயாயினும் சித்ராங்கனிடத்தில் அவன் அதிகப் பற்றுள்ளவன். எவ்வேளை எப்படியிருக்குமோ! ஒருகால் சித்ராங்கன் கொலைக்குத் தான் காரணமானது அறிந்து அவ்வூர் தன்னோடு இரண்டுபடுமாயின் கலாநாதனைத் தன் படைஞரால் கடத்தல் அரிதாகிவிடும். ஆகையால் கந்தனைக் கொன்ற குற்றத்திற்காக இக் கம்மியனையும் தூக்கிலே போக்கிவிடலாம். பிரதாபதீரன், மணிவாளன் கஜேந்திரஸிம்மன் ஆயினோர் அதுகாறும் அங்குவந்திலர். தானனுப்பிய பொய் நிருபத்தை அவர் மன்னவன் ஆணையே என்று மதித்திருத்தல் வேண்டும். மதித்து முரண்செய்திலர். பிறகுயானே வேந்தனாகி அவர்களை வரவழைத்து இளவரசன் கொலையை அவர்களது தலையில் சுமத்தித் தன் வாழ்விற்குக் களையாயிருக்குமவர்களைக் களைந்தெறிந்து விடலாம். இனி, என், எஞ்சியிருப்பது விச்வகேசரி யொருவனே. அவனுக்கும் கடுவொன்று தன் மடியிலேயே இருக்கின்றது" என்று இன்னவகை எண்ணிப் பாவமே பொருளாக வணிகம்புக்க இப்பாதகன் தன் கணக்கை முடிவுகட்டி அளவிறந்து இலாபந்தான் விஞ்சியதென ஏமாந்த சிந்தையனாயிருக்க, விராடனை மன்னவன் இரங்கிநோக்கி, "விராடா, வருவான் என்ற என் மைந்தன் வந்திலனே......என் செய்வேன்! என் மனம் பதைக்கின்றதே .... அவனுக்குஉற்ற ஆபத்துத் தீர்ந்து அவன் எம்பால் புறப்பட்டான் என்று நீ கேள்வியுற்ற வதந்தி மெய்யேயோ!............. விராடா, ஐயகோ! ஏன் உன் முகம் இப்படி வாடுகின்றது......இழந்தேனோ என் மகனை? இயம்பாய், இயம்பாய்!" என்று அவன் கைகளைப்பற்றி இரந்து கேட்டான். இதற்குத்தான் காத்திருந்தான் விராடன்.

"அண்ணா, யான் என்செய! எதுவரினும் நாம் ஏற்கத்தானே வேண்டும். மாநுடராய்ப் பிறந்தவர்க்குச் சுகமுமுண்டு, துக்கமுமுண்டு. எமதருமிளமகன் விதி எவ்வாறிருந்ததோ!" என விராடன் முகங்கவிழ்ந்து கலுழ்வான் போல் நின்றனன்.

"எந்தாய், மைந்தா என்னானையோ!...... ஏனடா, விராடா, முன்னுரைத்த நின் உறுதிமொழிக்குத் தீதிலவே! பின்னேதேனும் நினக்குத் தெரிந்ததோ!

"வேந்தே, உளையக் கூறும் ஊக்கமில்லேன்...எனினும்......எனினும்......பிழைத்தனன் எம் மைந்தன் என்றெனக்குச் சொன்னவன் சொன்ன செய்தி பொய்யோ எனச் சங்கையுறு கின்றேன்... அல்லாக்கால் இந்நேரம் சித்ராங்கன் நம் சிந்தைகளிக்க இங்கு நிற்றல் வேண்டும்...ஆதலின் உன் மனதை உறுதி செய்து கொள்."

இதனைக்கேட்க அரசன் சோர்ந்து சாய்வான் என்று எண்ணினான் விராடன். வேந்தனோ மிகவும் தளர்வடைந் தானாயினும் தன்நினைவழிந்துவிட வில்லை. "அடிகாள், நிமித்தமோ நன்றென் றியம்பினீர். மற்றென் தம்பியின் மாற்றமோ மாறாக இருக்கின்றது; எது பொய்க்குமோ என்றேங்குகின்றேன்" என, மடாதிபதி "வேந்தே கோவிலில் திரு மணிகளன்றோ நற்குறி கூறியன. உம்பி பொய்த்தாலும் எம்பிரான் பொய்த்திடான். கவலற்க" என்று தெருட்டிய மொழிகள் தேவரமுதம்போல் மன்னன் செவியில் பொழிந்தன.

அரசனது மனதைத் தன் அவலச் சொற்களால் அலசி மூர்ச்சனையடைவித்து அதனைத் தெளிவிப்பான் போல் தன் கையிருந்த விடத்தைப்பாலோடு கலந்து கொடுத்துவிட நினைத்திருந்த விராடன், தன் சொற்களால் அவன் சோர்வடையததால் அமைதியிழந்து "என்ன வன்னெஞ்சன் இம்மன்னன்; மைந்தன் இறந்தானெனச் சங்கையுற்றும் மூர்ச்சனை போயிலன்" என்று வேந்தனை வெறுத்து, "முன்னவா, என் மனதைப் பீடிக்கும் இவ்வையம் பொய்யாய்ப் போக வேண்டு மென்று பிரார்த்திப்பார் என்னிற் பிறரிலர். எனினும்—ஐயோ! எவ்வாறுரைப்பேன் பாதகர் படுகொலை புரிந்தேவிட்டனர் ...... நமதரும் பிள்ளையை இனிக் காணமாட்டோம்", என்று இயம்பிவிட்டனன். கேட்டானரசன். அலறினான். மெய்பதறக் குரல் நடுங்கக் கலுழ்ந்து தனதிரு கைகளையும் உயர்த்தி ஒன்றும் உரையாது அகிலேண்டச்வரர் தோள்களிற் சார்த்தித் தீப்பட்ட புழுவெனத் துடித்தான். அன்னவனை விராடன் தழுவி, "அழிதகங் கரையேல் அண்ணா ஆற்றிடு சிறிது போது. பழியினைத் தீர்க்க வேண்டும். பாதகர் ஒறுக்க வேண்டும். வழியிலை தெய்வங் கெடுத்தால். மதியினால் பொறுத்திருப்பாய். இழந்துளர் நின்போல் மைந்தர் எத்தனை பேர்கள் இல்லை" என்று ஏதேதோ வாய் வந்தன இயம்பினான்.

T. N. சேஷாசலம்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஒதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், **கலா நிலயம்,**
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வேங்கடாமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநுட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம, இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன்றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

காங்கிரஸ் கூடுவதற் கமைந்த தேசபந்து நகரில் 28உ காங்கிரஸ் தலைவர் பண்டித மோடிலால் நேரு தேசக் கொடியேற்றித் திருவிழா நடத்திவைப்பார்.

***

அகில இந்திய மாதர் மகாநாடு இவ் வருஷம் கல்கத்தாவில், இந்த மாதம் 27, 28ஆந் தேதிகளில் கூடவிருக்கின்றது. அதற்குத் திருவாங்கூர் மகாராணி, தலைமை வகிப்பார்.

***

கல்கத்தாவில் இந்தமாதம் இருபத்தைந்தாம் தேதி கூடவிருக்கும் அகில இந்திய ஆசார சீர்திருத்த மகாநாட்டில் அகிலஇந்திய சமபந்திபோஜன விருந்தொன்று நடத்து வதாகத் தீர்மானித் திருக்கிறார்கள்.

***

ஆந்திர சர்வகலாசாலைக்குக் குண்டூர் ஜில்லா போர்டு ஐந்து லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. இத்தொகை ஜில்லா போர்ட்டுக்குச் சொந்தமான ரயில்பாதை ஒன்றின் வரும்படியில் இருந்து எடுக்கப்படும்.

***

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் ஆகாயமார்க்கத்தால் போக்குவரவிற்கு வேண்டிய ஏற்பாடுகள் முடிவடைந்து வருகின்றன. அதன்படி இனி ஆறுதினங்களுக்குள் தபால்களும் பிரயாணிகளும் இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் போகவும் வரவும் கூடும்.

***

இந்திய வர்த்தமானப் பத்திரிகைகளில் அனேகம் ஸைமன் கம்மிஷன் நடவடிக்கைகளை வெளியிடுவதில்லை என்று தீர்மானித்து, அவ்விதம் செய்வது எதற்காக வென்பதைப் பற்றிக் குறிப்புக்களும் வரைந்திருக்கின்றன.

***

இவ்வருஷம் கல்கத்தாவில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் பொருட்காட்சிக்குக் கல்கத்தா நகரச்சங்கம் ஒரு லக்ஷம் ரூபா நன்கொடை கொடுக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நகரசபையில் ஒரு அங்கத்தினர் கொண்டுவா விருக்கிறார்.

***

பதினாயிரம் பவுன் விலைமதிப்புள்ள சாமான்களடங்கிய தபால் பை ஒன்று லண்டனில் தபால் வண்டி ஒன்றிலிருந்து காணாமற் போய்விட்டது. இந்தத் திருட்டு எவ்விதம் நடந்தது என்பதைப்பற்றி இன்னும் ஒன்றும் தெரியவில்லை. ஒரு காலிப் பை மாத்திரம் கிடைத்திருக்கின்றது.

***

ஸ்மர்ணா என்னும் நகரில் மழை வெள்ளத்தால் மிகவும் அதிகமான பொருட் சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. சில விடங்களில் ஐந்து அடிக்குமேல் வெள்ளம் தங்கியிருக்கிறதாம். சனங்கள் வீடுகளின்கூரைகள்மேலும் மரக்கொம்புகளிலும் இருக்கின்றனர். அநேக வீடுகள் இடிந்து விழுந்து விட்டனவாம்.

***

தென்னிந்திய இருப்புப்பாதை வேலை நிறுத்தத்தோடு சம்பந்தப்பட்டு இருப்புப்பாதைச் சட்டத்துக்கு விரோதமான காரியங்கள் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சர்கார், சிங்காரவேலுச் செட்டியாராகிய இருவர் மேலும் தொடுக்கப்பட்ட வழக்கு முன் மாஜிஸ்ரேட் விசாரணைசெய்து, இப்போது சிலநாளாகச் செங்கல்பட்டு செஷனில் விசாரணை நடந்துகொண்டு வருகிறது.

***

சென்ற ஏழாந்தேதி, கல்கத்தாவில் நடைபெற்றுவரும் 'பார்வர்டு' என்னும் பத்திரிகையின் ஆசிரியரும் அதைப் பிரசுரிப்பவரும் ராஜ்யதுவேஷம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கைதுசெய்யப் பட்டார். இதற்குமுன் போலிசார் பத்திரிகை ஆபீஸைப் பரிசோதனை பண்ணி அப்பத்திரிகையின் ஒரு குறித்த பதிப்பை எல்லாம் கைப்பற்றினர். கைதிகளான இருவரையும் அவர்கள் சொந்த உத்தரவாதத்தின் பேரில் விடுதலை செய்திருக்கிறார்கள்.

***

பம்பாய்ப் புதிய கவர்னரான சர் பிரடரிக் ஸைக்ஸ் சென்ற 17-ந்தேதியன்று பம்பாயில் அப்போலோ பந்தரில் வந்திறங்கினார். பம்பாய் நிர்வாக சபை யங்கத்தினரும், பம்பாய் ராஜதானியைச்சேர்ந்த சுதேச மன்னர் பலரும், பம்பாய் நகரச்சபையாரும், இன்னும் அனேகதனவந்தர் உத்தியோகஸ்தர்களும் வரவேற்கக் கூடியிருந்தார்கள். நகரசபையார் உபசாரப் பத்திரம் படித்தார்கள், அதற்குக் கவர்னரும் தக்கபடி பதிலளித்தார்.

***

சென்றவாரம் 6உ யன்று மைசூர் சமஸ்தான ஸ்திரீகளின் மகாநாடு ஒன்று கூடியது. அதற்கு மிஸ்ஸஸ் மிர்ஸா இஸ்மேயில் தலைமை வகித்தார். அதனிற்கு மைசூர் சமஸ்தானத்திலுள்ள பிரபல உத்தியோகஸ்தர்களின் மனைவிமாரும் மற்றவருஞ் சேர்ந்து சுமார் 500 மாதர் வந்திருந்தனர். அதனில், பெண்களுக்கு விவாக வயதைப் பதினாறாக்கவேண்டு மென்றும், சட்ட சபைகளில் ஸ்திரீகளுக்கு ஸ்தானங்கள் இருக்கவேண்டுமென்றும், மாதர்களுக்கு வார்சுரிமை அளிக்கவேண்டுமென்றும், பெண்களுக்கு ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்தவேண்டுமென்றும், இதுபோன்ற தீர்மானங்கள் பலவும் முறைப்படி செய்யப்பட்டன.

***

சென்ற 5உ பெங்களூரில் கிறிஸ்தவ மாணவர் மகாநாடு கூடினது. அதனில் மைசூர் மகாராஜா மதங்களின் ஒற்றுமையைப்பற்றித் திவ்வியமொழிகள் சிலசெப்பினார். "வழிபடு முறையில் வேறுபாடுகள் இருக்குமாயினும் எல்லா மதங்களும் நாடியடையக் குறிப்பது தனிப் பெரும் பொருள் ஒன்றையே. எவ்வெவர் எங்கெங்கு எம் கடவுளே என்று எந்தப்பேர் சொல்லிக் கும்பிட்டாலும் எப்பாஷையில் அழைத்தாலும், அவைகளெல்லாம் கேசவனையே சென்று அடைகின்றன. ஜுரவெறி கொண்டு ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அலைகின்ற மனதை மேனாட்டார் அடக்கிக்கொண்டு, இந்தியர்கள் முன்னோர் வகுத்த வண்ணம் சிறிது அமைதியோடு வாழ்வார்களாயின் ஏகமாயிருக்கின்ற கடவுளின் நிலை அவர்களுக்குப் புலப்படும். மற்ற மதங்களோடு இந்துக்கள் பெரும்பான்மை மாறுபடாதிருப்பதற்கும் பிறநாட்டார் பெரும்பான்மை மாறுபடுவதற்கும், இம்மனப்போக்கில் உள்ள வித்தியாசமே காரணம்" என்று மகாராஜா இனிதின் விளக்கினார்.

189033

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Prnted at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)